
விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

டெங்கு ஒழிப்புப் பணியில் அணி திரள்வோம்

இராகம் 01 தாளம் 109 | வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 04 திங்கட்கிழமை (19.11.2012) | பக்கங்கள்: பதினாறு



நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ முல்யாணி இந்திரவதி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி ஜனசத்தி கிராமத்திற்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## கஹவத்தைக் கொலை முயற்சி சந்தேக நபர் தற்கொலை முயற்சி

(இரத்தினபுரி)

கஹவத்தை பிரதேசத்தில் இளம் தம்பதியினரைக் கொலை செய்ய முயற்சித்தாரென்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தற்கொலைக்கு முயன்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது உடலில் நஞ்சு கலந்திருப்பதாகவும், இவர் தற்கொலைக்கு முயன்றதால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றும் கஹவத்தை வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னரும், கஹவத்தை மர்மக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை

02

## பொலிஸ் இன்ஸ்பெக்டரை சுட்டுக்கொன்றவர் கைது: ஆயுதமும் மீட்பு

(கொழும்பு)

சப்ரகமுவ பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பதிகாரியும் தலைமை இன்ஸ்பெக்டருமான இந்திரசோமா ரத்நாயக்க சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் காயங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட

02

# மாவீரர் தின நிகழ்வுச் சர்ச்சையே பரிதி கொலைக்குக் காரணம்

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

(ஆர்.சிவரூபன்)

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் தின நிகழ்வைப் பாரிஸில் நடத்துவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையே பரிதியின் படுகொலைக்குக் காரணம் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. புலிகளின் ருத்ர குமாரன் அணியும், நெடியவன் அணியும் இணைந்து பாரிஸில் மாவீரர் தின நிகழ்வை நடத்த எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தமையே பரிதியின் கொலைக்கான காரணம் என்றும் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நடராஜா மதீந்திரன் என்ற இயற் பெயர் கொண்ட பரிதி 1980 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் இணைந்தார். ரேகன் என்ற இயக்கப் பெயரோடு மன்னாரில் புலிக்கள் இயக்கத் தளபதியாகச் செயற்பட்ட

02

## வாராந்தம் பத்து பாலியல் துஷ்பிரயோகங்கள்

சுகாதார அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களில் பெண்களிற்கு எதிராக இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக வாரம் ஒன்றிற்கு- 8 -10 முறைப்பாடுகள் தம்மிடம் வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கீழ்மட்ட நிறுவனங்களிலேயே அதிகமான முறைப்பாடுகள் இடம் பெறுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பிரதம நீதியரசரின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விசாரணைகளின் போது பிரதம நீதியரசருக்குச் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா

02

## சட்டவிரோத ஆட்கடத்தலைத் தடுக்க இலங்கை - ஆஸி. கூட்டு முயற்சி

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அவுஸ்திரேலியாவும் இலங்கையும் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் தொடர்பிலான சகல தகவல்களையும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அவுஸ்ரேலியா பெற்றுக்கொள்ளவுள்ளது.

இலங்கையிலிருந்து மக்களை சட்டவிரோதமான

02

## தமிழக கடற்கரையோரங்களில் வெடிபொருள் எச்சரிக்கை

(சென்னை)

தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளுக்கும் மீனவர்களுக்கும், புலனாய்வுப் பிரிவினர் கடலில் மிதந்து வருகின்ற எந்தவிதமான சந்தேகப் பொருட்களையும் தொட வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னாள் இலங்கை கடற்படை அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட வெடிபொருள் மிதக்கவிடப்பட்டிருப்பதாகவே புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் மீனவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு எச்சரித்ததுடன், கடல்

02

## ஐ.நா.மனித உரிமைப் பேரவைக்கு வாக்கெடுப்பில் அமெரிக்கா தெரிவு

(ஜெனிவா)

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் நட்பு நாடுகள் சுழற்சி முறையில் நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக்கு புதிதாக 18 உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், அதிகப்படியான வாக்குகளுடன் அமெரிக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர, ஜேர்மனி, அயர்லாந்து, ஆஜென்ரீனா, பிரேசில், ஐவரிகோஸ்ட்,

02

## கப்பல் நிறுவன முகாமையாளர் காரிலிருந்து சடலமாக மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கப்பல் நிறுவனமொன்றின் முகாமையாளரான நாராஹேன்பிட்டி, பொல்ஹேன்கொடையைச் சேர்ந்த 52 வயதான எம்.பி.விஜித டி சொய்ஸா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவி மற்றும் உறவினர்கள் அவரது சடலத்தை அடையாளம் காண்பித்துள்ளனர்.

விரிவுரை ஒன்றிற்காக வீட்டிலிருந்து அவர் நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றார். அவர், தொடர்பில் பொலிஸார்

02

## கழிவுத் தேயிலை விற்கும் நான்கு நபர்கள் கைது

(கொழும்பு)

கழிவுத் தேயிலையை விற்க முயன்ற நால்வர் கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இத் தேயிலைத் தூள்கள் விற்பனைக்கு தயாரான நிலையில்

02

# இந்திய வாகனங்களின் இறக்குமதி குறைப்பு ஜப்பானுக்கும் சீனாவுக்கும் வாய்ப்பு

இந்தியாவில் இருந்து வாகன இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட வுள்ளன. அதற்கு பதிலாக ஜப்பானில் இருந்து அதிக வாகனங்களை இறக்குமதி செய்யும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் சீனா வாகனத்துறையில் தமது ஆதிக்கத்தை செலுத் தும் முகமாக இலங்கையில் வாகன உற்பத்தி மையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வாகனங்களுக்கான கேள்வி குறைந்து வருவதாக தெரிவிக் கப்படும் நிலையிலேயே இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அர சாங்கம் முன்னுரிமை வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் ஜப்பானில் இருந்து தற்போதைய வாகன இறக்குமதியை காட்டிலும் சீனாவில் இருந்து அதிக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன் பல மில்லியன் டொலர் ஒதுக்கீட்டில் சீனாவின் வாகன உற்பத்தி மையம் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ளது.

# இலங்கை மீது தடைவிதிக்க நேரிடும்: ஐரோப்பிய ஆணைக்குழு எச்சரிக்கை

இலங்கை அரசு சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக ஐரோப்பிய ஆணைக்குழுவின் கடல்வள விவகார ஆணையாளர் மாரா 'யா டமான்கனி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் இலங்கை உள்ளிட்ட எட்டு நாடுகள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, கம்போடியா, பிஜி தீவுகள், கய்னா, பனாமா, டொகோ மற்றும் வனுவாட்டு மற்றும் பெலிஸ் ஆகிய நாடுகள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கத் தவறினால் அந்நாடுகள் மீது தடைகள் விதிக்க நேரிடும் என ஐரோப்பிய ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த எச்ச ரிக்கை ஒரு மஞ்சள் அட்டையை என்றும், அதற்கடுத்த கட்டமாகவே கறுப்புப்பட்டியலில் உள்ளடக்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என் றும் அவர் கூறியுள்ளார்.

## கழிவுத் தேயிலை ...(தொடர்)

களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் தேடுதல் நடவடிக்கை மூலமாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 16,000 கிலோகிராம் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவ 'த்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கப்பல் நிறுவன...(தொடர்)

தமக்கு அறிவிக்கும் வரை எந்தத் தகவலும் தங்களுக்கு கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

## காவத்தைக் கொலை...(தொடர்)

செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நிரபராதியான தனக்கு இந்த கைதினால் அபகீர்த்தி ஏற்பட்டு விட்ட தாகக் குறிப்பிட்டே அவர் தற்கொலை செய்துகொண்டதாக அவரின் மனைவி தெரிவித்திருந்தார்.

## பொலிஸ் இன்ஸ்பெக்டரை...(தொடர்)

சந்தேக நபர் இரத்தினபுரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். காணி தொடர்பில் நீண்டநாள் இடம்பெற்ற கருத்து முரண் பாடே இந்தச் சம்பவத்திற்குப் பிரதான காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் வங்கி ஒன்றில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற ஒருவர் என்று தெரிவித்த பொலிஸார், இந்த சம்பவத் திற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கியையும் மீட்டுள் ளனர்.

## பிரதம நீதியரசரின்...(தொடர்)

ஆஜராகவுள்ளார்.

குற்றவியல் பிரேரணையின் 14 குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னிலையில் பிரதம நீதியரசர் எதிர் வரும் 23 ஆம் திகதி ஆஜராகவுள்ளார்.

இதேவேளை தாம் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்க ஆறு வாரகால அவகாசம் வேண்டும் என்று பிரதமநீதி யரசர் விடுத்திருந்த கோரிக்கையை நாடாளுமன்ற தெரிவுக்குழு நிரா கரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத...(தொடர்)

முறையில் அவுஸ்திரேலியாவிற்கு அழைத்துச் செல்லும் நபர்கள் பற்றிய தகவல்களை அவுஸ்திரேலியா சேகரித்துள்ளது. இந்தத் தகவல்கள் இலங்கை அரசாங்கத்துடன் பரிமாறிக்கொள்ளப்பட வுள்ளது.

# பாரிஸில் பரிதி கொலை தொடர்பாக விநாயகம் கைது

புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான விநாயகம், பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளா ரென்று பிரான்ஸ் பத்திரிகைகள் செய்தி வெளி யிட் டுள்ளன புலிகளின் சர்வதேச வலையமைப்பின் ஒரு பிரிவிற்கு விநாயகம் தலைமை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

புலிகளின் மற்றுமொரு சிரேஷ்ட தலைவரான பரிதி எனப்படும் நீகனின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் விநாயகம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலிகளின் சர்வதேச வலையமைப்பின் ஒரு பிரிவி ற்கு விநாயகம் தலைமை வகிக்கின்றார். இன்னு மோர் பிரிவிற்கு நெடியவன் தலைமை வகிக் கிறார்.

ஐரோப்பாவில் செயற்பட்டு வருவதாகக் கூறப்படும் புலிகள் வலையமைப்பின் வெவ்வேறு பிரிவுகளுக் கிடையில் இடம்பெறும் குழு மோதல்களே பரிதியின் கொலைக்கான காரணம் என தெரிவிக்கப்படுகின் றது.

பாரிஸ் பொலிஸார் விநாயகத்தைக் கைது செய் துள்ளனர்.

பரிதி கொலையுடன் இலங்கை அரசாங்கத்தைத் தொடர்புபடுத்த புலிகள் முயற்சித்ததாக ஊடகங் கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.பரிதி கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டோர் மூன்றாம் நபர் விநாயகம் என் பதும் குறிப்பிடத்தக்கது.விநாயகம் ஐரோப்பாவிற்கு தப்பிச் சென்று,புலிகளின் வலையமைப்பின் தலை மைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் எனத் பத்திரி கைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிதி அல்லது ரீகன் என அழைக்கப்படும் மதிந் திரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டளைத் தளபதிகளில் ஒருவர் என்பதுடன் பிரான்ஸிலுள்ள தமிழ் ஒருங்கிணைப்பு குழுவின் பொறுப்பாள ருமாவார்.

## ஆஸியிலிருந்து நேற்று 50 இலங்கையர்கள் நாடுகடத்தல்

அவுஸ்திரேலியாவிலிருந்து மேலும் 50 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் நேற்று நாடு கடத்தப்பட்டனர்.

அண்மையில் படகுகளில் அவுஸ் திரேலியாவை சென்றடைந்த இலங்கையர்களே விசேட விமா னம் மூலம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள் எவ ரையும் புகலிடக் கோரிக்கையா ளர்களாக கருத முடியாது என வும், இதனால் குறித்த நபர்களை நாடு கடத்துவதற்கு சர்வதேச சட் டங்களின் அடிப்படையில் தடை யில்லை எனவும் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவுன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நவம்பர்மாதமான முறையில் 282 இலங்கைப் புக லிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை 380 என கிறிஸ் பொவுன் தெரிவித்துள்ளார்.

## அடுத்த நடவடிக்கைக்காக டெசோ மீண்டும் நாளை கூடுகிறது

திராவிட முன்னேற்ற கழகத்தின் டெசோ அமைப்பின் பிறிதொரு கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது. இலங்கை தமிழர்களின் வாழ்வுரிமைக்காக, சென்னையில் கடந்த ஆகஸ்ட் மாதம், 12 ம் திகதியளவில் "டெசோ" மாநாடு நடந்தது. அதில் எடுக்கப்பட்ட தீர்மா னங்கள் அடங்கிய மனுவுடன் அண்மையில் திராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளர் ஸ்டாலின் தலைமையிலான குழு ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளிடம் கையளித்தது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை துணை பொதுச்செயலர், ஜெனிவாவில் உள்ள மனித உரிமை ஆணையக தலைவர் ஆகியோரிடம், டெசோ தீர்மானங்கள் கையளிக்கப்பட்டி ருந்தன.

அடுத்தக் கட்ட நடவடிக்கைகள், போராட்டங்கள் குறித்து விவாதிக்கவும், டெசோ கலந்துரையாடல் கூட்டம், இன்று திங்கட் கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதனிடையே, இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளில் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் இந்தியா அதனை மீண்டும் ஆதரிக்கும் என்று சென்னை வானூர்தி நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திராவிட முன்னேற்ற கழக தலைவர் மு.கருணாநிதியை இந்திய பாதுகாப்பு சட்டமூலத்திற்கமைய கைது செய்ய முடியும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி குறிப்பிட் டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் நிலவும் ராஜதந்திர உறவு 'ினை பாதிப்படைய வைக்கும் முயற்சிகளை அவர் மேற்கொண்டு வரு கின்றமையே இதற்கான காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழக கடற்கரை...(தொடர்)

மற்றும் கடலோர பாதுகாப்பை பன்மடங்காக அதி கரித்துள்ளனர்.

அத்துடன் கடலில் மிதந்து வருகின்ற எதனையும் தொடவேண்டாம் என்றும் எச்சரித்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் கடந்த வெள் ளிக்கிழமை கிடைத்ததை அடுத்து தமிழக கட லோர பாதுகாப்பு பொலிஸ் தங்களது ரோந்து நடவ டிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. முறையற்ற வகையில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள் குறித்து சிவப்பு எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

ஒவ்வொரு நிலையத்தில் இரண்டு படகுகளுக்கும் மேற்பட்ட 12 கடலோர காவல் நிலையங்களைச் சேர்ந்தோர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள னர். மொத்தமாக 14 படகுகள் வெள்ளிக்கிழமை இரவு முதல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

கடலில் ஏதாவது சந்தேகத்திற்கிடமான மிதக்கும் பொருளை பார்த்தால் அதனை தொடுப் பார்க் கவோ அல்லது பரிசோதிக்கவோ வேண்டாம் என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு பிரிவினர், அது தொடர் பில் கடலோர பாதுகாப்புச் சேவைக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

## மாவீரர் தின நிகழ்வு...(தொடர்)

விக்டரின் தலைமையின் கீழ் இவர் செயற்பட்டார். இதன் பின்னர் புலிகளின் இயக்கத்தின் யாழ்.மாவட்டப் பிரதித் தளபதியாகவும் செயற்பட்டார்.

1987 ஜூலை இறுதியில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் படையுடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பரிதி இந்தியாவில் சிகிச்சை பெற்ற பின்னர் புலித்தலைமையால் பிரான்சுக்கு அனுப்பப்பட்டார்.

பிரான்சில் இயங்கி வந்த தமிழர் ஒருங்கி ணைப்புக் குழுவின் தலைவராக பரிதி செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரிஸின் புறந கர்ப் பகுதியிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வின் அலுவலகத்திலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருக்கையில் கடந்த ஒன்பதாம் திகதி பரிதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

## ஐ.நா.மனித உரிமை...(தொடர்)

எஸ்தோனியா, எதியோப்பியா, காபோன், ஜப்பான், கசாகிஸ்தான், கென்யா, மொன்ரனிக்ரோ, பாகிஸ் தான், தென்கொரியா, சியராலியோன், ஐக்கிய எமி ரேட்ஸ், வெனிசுலா ஆகிய நாடுகளும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவாகியுள்ளன.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் அடுத்த ஆண்டில் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்க மாட்டாது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்தாண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள் ளது.

இதன் போது இலங்கைக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பில் எட்டியுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் நட்பு நாடுகளின் ஆதரவில் லாத இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொள் ளும் என்று கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டியுள் ளது.

அத்துடன், இம்முறை பாகிஸ்தான் தெரிவாகியி ருப்பது மட்டுமே, இலங்கைக்கு ஆறுதலளிக்கக் கூடிய ஒரே விடயம் எனவும் மேலும் குறிப்பிட்டுள் ளது.




இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 19.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# தெரிவுக்குழு குறித்து எம்.பிக்கள் தகவல்களை வெளியிடக்கூடாது:

## - சபாநாயகர்



குற்றப்பிரேரணை குறித்து ஊடகங்களுக்கு தகவல் வழங்கும் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனமாக இருக்க வேண்டும்.அத்துடன் தெரிவுக்குழு மற்றும் கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பாக எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தகவல்களை வெளியிடக்கூடாது என்று சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க தெரிவுக்குழு தொடர்பாக ஊடகங்களுக்கு தகவல் அளித்துள்ள பின்னணியிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வெளியிடப்பட்ட கூட்ட அறிக்கையிலுள்ள விடயங்களை தவிர கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பாக வேறு எந்தவொரு தகவல்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தக்கூடாது என்றார். இதன் போது எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க பிரதம நீதிபதி தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுள்ளார் என அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருப்பதாக சுட்டிக் காட்டினார்.

அதற்கும் பொறுப்பானவர்களை அழைத்து அறிவுறுத்துவதாக கூறிய சபாநாயகர் அரசாங்கத்தின் பக்கத்தில் 163அங்கத்துவர்கள் இருக்கின்ற போதும் குற்றப்பிரேரணையில் கையொப்பமிட்ட 117 நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்திலெடுத்தே தான் தெரிவுக்குழுவின் அங்கத்துவர் தொகையை தீர்மானித்ததாகக் குறிப்பிட்டார்.

# நெடுந்தீவில் 50 விவசாயிகளுக்கு இலவச விதை நெல் விநியோகம்

(தீவகம்)

நெடுந்தீவில் தற்போதைய காலபோகத்தைப் பயன்படுத்தி அங்குள்ள வயல்களை வளமான நிலங்களாக்கி அதிக அளவில் நெல் வேளாண்மைகளையும் மேட்டுநிலங்களில் உப உணவு வகைகளையும் பயிரிடுவதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவிற்கான விவசாயப் போதனாசிரியர் நா. கோகுலராஜன் மேற்கொண்டிருக்கிறார்.

நெடுந்தீவு தெற்கு, மேற்குப் பகுதிகளில் ஐம்பது விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விவசாயத் திணைக்களத்தினால் இலவசமாக விதைநெல் வழங்கப்பட்டு பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

# அனலைதீவில் மிளகாய் செய்கைக்கு ஊக்குவிப்பு

(தீவகம்)

அனலைதீவில் மிளகாய்ச் செய்கையினை மேற்கொள்வதற்கான முயற்சிகளை விவசாயத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் அந்தக் கிராமத்திலிருந்து மிகச் சிறந்த விவசாயிகள் எனக் கருதப்படுகின்றன இருபது பேரை விவசாயத் திணைக்களம் தெரிவு செய்து, அவர்களுக்கு இலவச மிளகாய் விதைகளையும் மிளகாய்ச் செய்கைக்கான பயிற்சிப் பட்டறைகளையும் நடாத்தியுள்ளது.

அனலைதீவில் உள்ள பொழுது போக்கு மண்டபத்தில் விவசாயப் போதனாசிரியர் செ. இராமநாதன் விவசாயிகளுக்கு பயிற்சிப் பட்டறையில் யாழ்.விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த பாடவிதானப் போதனாசிரியர் எஸ்.சௌந்தரராசன், நெடுந்தீவு விவசாயப் போதனாசிரியர் நா.கேஸ்ராஸ் ஆகியோர் கலந்து கொண்டு மிளகாய்ச் செய்கையினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும், அதன் பின் கிடைக்கின்ற மிளகாயை எவ்வாறு பதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விளக்கவுரைகளை விவசாயிகளுக்கு அளித்தார்கள். இலவச மிளகாய் விதைகள் அதற்கான உள்ளீடுகள், இராசாயன வளமாக்கிகள் என்பனவும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.



யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இவ்வருடம் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் மாணவர்களுடன் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா மற்றும் அதிபர் திருமதி கௌ.பரந்தாமன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (உடுவில்)

# அல்லைப்பிட்டியில் எள்ளு பயிர்ச் செய்கைக்கு உதவி

(தீவகம்)

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் இவ்வருடகால போகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கை முடிவுற்றதும் அந்த வயல் நிலங்களை வெற்று நிலமாக விடாது, உடனடியாக உழுது எள்ளுப் பயிர் செய்கையினை மேற்கொள்ளுமாறு வேலணை விவசாயப் போதனாசிரியர் செ.இராமநாதன் தெரிவித்துள்ளார். இவ்வாறு வயல்களில் எள்ளுப்பயிர் உற்பத்திகளை மேற்கொள்ள விரும்புகின்ற விவசாயிகள் அனைவரையும் வேலணைப் பகுதிக்கான விவசாயப் போதனாசிரியரின் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

இவ்வாறு பதிவு செய்வோர்களில் ஐம்பது பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மிகவும் குறைந்த மானிய அடிப்படையில் நல்லரக விதை எள்ளு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொடி முந்திரிகை விளைச்சல் மழையால் சேதம்

(தீவகம்)

தீவகப் பகுதிகளில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட கொடி முந்திரிகைச் செய்கை (திராட்சை) நல்ல விளைச்சலையும் பெரும் இலாபத்தையும் சந்தை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித்தந்திருந்த போதும் கூடத் தற்பொழுது பெய்துவருகின்ற பெரும் மழை காரணமாகத் திராட்சைப்பழங்கள் வெடித்துப் பழுதாகி வருகின்றன.

இதனால் சந்தைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

# வலிகாம ஆசிரியர் விவரங்கள் திரட்டப்படுகின்றன

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் கடமையிலுள்ள ஆசிரியர்களில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஆண்டில் ஆசிரிய பரம்பலைச் சீராக்கும் முகமாகவும், இடமாற்றங்களை வழங்குவதற்கும் ஏற்றவகையில் பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விபரங்கள் கல்வி வலயத்தினால் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



யா/கல்வியன்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற உளநாள் கண்காட்சி நிகழ்வினை அதிபர் திருமதி கௌ. பரந்தாமன், ஆசிரிய ஆலோசகர் திருமதி ம.பாலசிங்கம் ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (உடுவில்)

# வவுனியா இறம்பைக் குளம் மகளிர் வித்தியாலயம் முதலாவது இடத்தில்

வடமாகாண மட்ட சிறுவர் நுண்ணறிவுத் திறனாய்வு வினா விடைப் போட்டியில் முதலாமிடத்தினை வ/வவுனியா இறம்பைக் குளம் மகளிர் வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

அண்மையில் யா/மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மகாணமட்டச் சிறுவர் நுண்ணறிவுத் திறனாய்வு வினாடி வினாப் போட்டியில் இரண்டாமிடத்தினை யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், மூன்றாமிடத்தினை யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

# பாடசாலைகளில் தேசிய மரம் நடுகைத் திட்டம்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் முப்பது பாடசாலைகளில் தேசிய மரம் மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மா, வேம்பு, தேக்கு, மலை வேம்பு மற்றும் பலா ஆகிய மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளன.



உலக இந்து மக்களின் விரதங்களில் ஒன்றான கந்தசஷ்டி விரதத்தின் ஐந்தாம் நாளான சூரன் போர் தினம் நேற்றாகும். முருகன் ஆலயங்களில் சூரன் போர் வெகு விமர்சையாக நடைபெற்றது. கொழும்பு, கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சூரன் போர் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

## வீதி திருத்தத்திற்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் வீழ்ந்து ஒருவர் பலி



வண்ணார் பண்ணையில் வீதித் திருத்திற்காக வெட்டப்பட்ட பள் ளத்தில் விழுந்த வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

கே.கே.எஸ் வீதியில் நேற்று முன்தினம் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

அச்சகவீதி கொக்குவிலைச் சேர்ந்த 55 வயதான என்.பத்மநாதன் என்பவரே சம்பவத்தின் போது பலியாகியுள்ளார்.

இவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் வீதி திருத்தப்பணிகள் மந்தகதியில் இடம்பெறுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் துப்பாக்கி முனையில் நகைகள் கொள்ளை:

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் உள்ள வீட்டில் நேற்றுமுன் தினம் இரவு புகுந்த ஆயுததாரிகள், துப்பாக்கி முனையில் பெருமளவான தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கல்லடி, திருச்செந்தூர் முத லாம் குறுக்கில் உள்ள வீட்டி லேயே இந்த கொள்ளைச் சம்ப வம் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கைத்துப்பாக்கியை காட்டி வீட்டில் இருந்த சுமார் சுமார் 12 இலட்சம் ரூபா பெறுதியுடைய 26 பவுண் தங்க நகைகளையே இவ்வாறு கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணையை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உலக வங்கியின் பணிப்பாளர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

இலங்கை விஜயம் செய்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, அங்கு உலக வங்கியின் நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு வந்துள்ள மேற்பட்ட குழுவினர், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு இடங்களிற்கும் விஜயம் செய்து பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இக்குழுவினர் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தைச் சந்தித்ததோடு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறுப்பிட்டிக் கிராமத்தில் இடம் பெற்ற வாழ்வாதாரம் தொடர்பான கண்காட்சியையும் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவில் மேகொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

மேலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் தொடர்பிலும் இக்குழவினர் பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

## உயிரிழந்த கைதிகளின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு தேவை

- சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா

உயிரிழந்த கைதிகளின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பின் உறுப்பினரும், சட்டத்தரணியுமான ஸ்ரீனாத் பெரேரா கோரியுள்ளார்.

அண்மையில் வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற வன்முறையில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட அனைத்து கைதிகளின் உறவினர்களுக்கும் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

போர் இடம்பெற்ற காலத்தில் மரண விசாரணையின்றி சடலங்களை அடக்கம் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது அவ்வாறான ஓர் அவசியம் கிடையாது. எனினும், தற்போது மேற்கொள்ளப்படும் பிரேத பரிசோதனைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

பிரேத பரிசோதனைகளுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசியமானது என ஸ்ரீனாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதம நீதியரசரின் கோரிக்கையை நாடாளுமன்ற தெரிவுக்குழு நிராகரித்தது

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளின் போது பிரதமநீதியரசருக்கு சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா ஆஜராகவுள்ளார்.

குற்றவியல் பிரேரணையின் 14 குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னிலையில் பிரதமநீதியரசர் எதிர் வரும் 23 ஆம் திகதி ஆஜராகவுள்ளார்.

இதேவேளை தாம் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்க 6 வாரக் கால அவகாசம் வேண்டும் என்று பிரதமநீதியரசர் விடுத்திருந்த கோரிக்கையை நாடாளுமன்ற தெரிவுக்குழு நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய இராசி பலன் (19.11.2012)

**நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள்**

**4 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : உத்தராடம் காலை 6.49 வரை அதன் பின் திருவோணம் பி.இ. 6.00 வரை (செவ்வாய் அதிகாலை)
**திதி** : சஷ்டி பி.ப. 3.47 வரை. அதன் பின் சப்தமி
**சுபநேரம்** : 12.09 - 1.39 **இராகுகாலம்** : 7.39 - 9.09
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில்முயற்சி தாமதம், புதிய நட்பு, அவதானம் தேவை.
**இடபம்** : பணவரவு குறைவு, தொழில் மாற்றம், வாக்கு கலகம்.
**மிதுனம்** : காரிய சித்தி, வியாபார முன்னேற்றம், மனமகிழ்ச்சி.
**கடகம்** : தொழில் விருத்தி, நல்ல சிந்தனை, பிறருக்கு உதவுதல்.
**சிங்கம்** : எதிர்பாராத வரவு, பெரியோர் மதிப்பு, சமூகசேவை.
**கன்னி** : புதிய தொழில் முயற்சி, முற்கோபம், பிரயாண தாமதம்.
**துலாம்** : புதிய சிந்தனை, வியாபார விருத்தி, நண்பர்களுக்கு உதவுதல்.
**விருச்சிகம்** : வாக்கு சாதுரியம், சிரமத்தின் மேல் பலன், திட்டமிட்டு செயலாற்றல்.
**தனுசு** : தொழில் முன்னேற்றம், காரிய தாமதம், மன அமைதி குறைவு.
**மகரம்** : நடைமுறை மாற்றம், பயனற்ற செயற்பாடு, வியாபாரத்தில் திருப்பம்.
**கும்பம்** : தொழில் வளர்ச்சி, மதிப்பு அதிகரிப்பு, சிறு இடையூறு.
**மீனம்** : செயற்திறமை, சமூகத்தில் நன்மதிப்பு, எதிரிகளால் நன்மை.

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

## ஐ.நா. வின் புதிய உள்ளக அறிக்கை பாதிப்பை ஏற்படுத்தாது: கோஹன

ஐக்கிய நாடுகள் அமைப்பின் புதிய உள்ளக அறிக்கை பாதிப்பை ஏற்படுத்தாது என ஐ.நா அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட போரின் போது இலங்கை, ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியை நாடியது. எனினும், எதிர்பார்த்தளவு உதவிகள் கிடைக்கப்பெறவில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பது கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட ஓர் சர்வதேச அமைப்பில்லை.





உறுப்பு நாடுகளின் நலன்களுக்காக பாடு படும் அமைப் பாக கருதப்படவேண்டும்.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

எனவே, இந்த அறிக்கை இலங்கையை எந்த வகையிலும் பாதிக் காது என கொஹன தெரிவித்துள்ளார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை

## செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி இனவாதத் தீயைப் பொசுக்க வேண்டும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்ற இரண்டாவது ஆண்டு இன்று ஆரம்பமாகிறது.ஜனாதிபதி நேற்றுத் தனது 67ஆவது பிறந்த தினத்தையும் கொண்டாடினார். நாட்டின் ஐந்தாவது செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டவர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள். எமது நாட்டு அரசியல் யாப்பின்படி செயலாற்று அதிகார மிகு ஜனாதிபதியே அரசாங்கத்தின் தலைவர் மட்டுமல்ல, ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தருமாவார்.

செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி, சட்டவாக்க சபையான பாராளுமன்றம், நீதித்துறை ஆகிய மூன்றுமே நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பின் மூன்று தூண்களாகக் கருதப்படுபவை. நான்காவது தூணாகக் கருதப்படுபவை ஊடகங்கள். இதனால்தான் ஊடகங்களை ஆங்கிலத்தில் FOURTH ESTATE என்று அழைக்கிறார்கள். கருத்துருவாக்கத்தில் ஊடகங்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது என்பது ஒரு புறமிருக்கட்டும்.

கருத்துருவாக்கத்தில் ஊடகங்கள் அளப்பரிய பங்கு வகிப்பது போல, செயலாற்று அதிகார மிகு ஜனாதிபதியிடமும் அளப்பரிய அதிகாரமும், பொறுப்புகளும் உள்ளன. இலங்கை ஒரு பல்லின, பல மத, பல சமூக அழைப்புகளைக் கொண்ட ஒரு நாடு. பிரதானமாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளே பேசப்படுகின்றன. ஆங்கிலம் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே மும்மொழிகளும் பயன்பாட்டில் உள்ளன. இலங்கை வாழ் மக்கள் பிரதானமாக பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என நான்கு சமயங்களைச் சார்ந்தவர்களாக உள்ளனர். சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் என்று நான்கு தேசிய இனங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

இன முரண்பாடு ஆயுத வடிவம் பெற்றதால்தான் பல்லின சமூக அமைப்பைக் கொண்ட இந்த நாடு அழிவுகளைச் சந்தித்தது. மூன்று தசாப்தகால யுத்தத்துக்கு அளவுக்கதிகமான அப்பாவி மக்களைப் பலி கொடுத்த நாடு இலங்கை. ஆயுதமேந்தியவர்களும் இலங்கை மாதா பெற்ற பிள்ளைகளே. ஒன்றில் அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பார்கள். அல்லது அரசின் அனுசரணையோடு 1983 ஆடியில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இனசங்காரத்தினால் உசுப்பிவிடப்பட்டவர்களாக இருப்பார்கள். எது எப்படியிருந்தாலும் ஜனாதிபதி ஒரு தடவை கூறிய வார்த்தைகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

“பெரும்பான்மைச் சமூகம், சிறுபான்மைச் சமூகம் என்று ஒன்றுமே இங்கு இல்லை. தேசபக்தர்களும், தேசபக்தி அற்றவர்களுமே இந்த நாட்டில் இருக்கின்றனர்” இப்படிச் சொல்லியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்.

இன முரண்பாடு, இன ஒடுக்குமுறையாக மாறி, யுத்தமாக உருவெடுத்து, அனைத்து இனங்களையும் சார்ந்த அப்பாவிகளைத்தான் அதிகம் பலியெடுத்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த வடுக்கள் இன்னமும் ஞாபகச் சின்னங்களாக எழுந்து நிற்கின்றன. நேற்றைய அவலங்களால் அப்பாவி மக்கள்தான் இன்னமும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள்தான் இதற்கு அதிகம் விலை கொடுத்தவர்கள் என்றாலும் மூவின மக்களுமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இஸ்ரேலிய சியோனிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனத்துக்காக, பாலஸ்தீன மக்களுக்காக நீண்ட காலமாகக் குரல்கொடுத்து வந்தவர், குரல் கொடுத்து வருபவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள். பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடுகிறோமென்று கூறிய ஹமாசும், பதாஹும் கூடத் தங்களுக்குள் மோதிக்கொண்டு அப்பாவி மக்களையே பலியெடுத்திருக்கிறார்கள்.

இந்த நாடு இனியும் இரத்தக் காடாக்கப்படக் கூடாது. மூவின மக்களும் பட்ட பாடு போதும் போதுமென்றாகி விட்டது. இருதரப்பிலுமுள்ள அப்பட்டமான பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகள் மீண்டும் இனவாதக் கூச்சல்களைக் கிளப்பத் தொடங்கிவிட்டார்கள். சரி, பிழைகளைச் சரிவர உணர்ந்து கொள்ளாமல், சர்வதேச சக்திகள் சிலவும் காட்டுக் கூச்சல்கள் போடுகின்றன. இனவாதக் காட்டேறிகள் களத்துக்கு வராவிட்டாலும்,புலத்தில் உயிர்த்துடிப்புடன் செயற்படுகின்றன. சர்வதேசப் பொலிஸ்காரர்களைப் போலச் செயற்படும் சில நாடுகளும் இலங்கையில் இனவாதம் தீப்பற்றி எரிய வேண்டும் என்பதற்காக எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்கள், தங்களை இனியும் சிறுபான்மையின மக்களென்று நினைக்கக் கூடாதென்றால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு காத்திரமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வெள்ளைக்காரன் விட்டுச் சென்ற பிரித்தாளும் தந்திரத்தின் நேரடித் தாக்கங்கள் சுதந்திர இலங்கையையும் பாதித்திருக்கிறது. ஜனாதிபதியிடம் செயலாற்று அதிகாரம் இருக்கிறது. இந்திய மக்கள் தேச பக்திக்கு முன்னுரிமை கொடுப்பதைப்போன்று இந்த நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் மாற வேண்டுமானால், இந்த நாட்டையே சீரழித்த இனவாதம் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி எறியப்பட வேண்டும். அதற்கு செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி அவர்கள் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே எமது வேணவா.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இலங்கை தொடர்பான ஐ.நா.வின் அறிக்கைகளும், குழுக்களும்

புலிகள் அமைப்பினருக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தின் போது இருதரப்பினரும் மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்களை பலர் ஒருவாறு மறந்து வரும் நிலையில் அவற்றைப் பற்றிய நினைவுகளை தூண்டும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக பரிசீலனைக் குழுவொன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது சாதாரண மக்களின் உயிர்களை பாதுகாக்கும் விடயத்தில் ஐ.நா.வின் செயற்பாடுகள் முறையாக அமைந்திருந்ததா என்று விசாரிக்க வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் சிபார்சின் பேரிலேயே இந்த உள்ளகக் குழு நியமிக்கப்பட்டது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது சாதாரண மக்களின் உயிர்களை பாதுகாக்கும் விடயத்தில் ஐ.நா. தவறிவிட்டது என அந்த உள்ளகக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காரணங்கள் எதுவாக இருப்பினும் இலங்கை அரசாங்கம் இந்த அறிக்கையை நிச்சயமாக மறுக்கவும் எதிர்க்கவும் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பது திண்ணம். அதேபோல் தமிழர்கள் மட்டுமல்லாது பல காரணங்களுக்காக அரசாங்கத்தை எதிர்க்கும் சகலரும் ஐ.நா.வின் இந்த உள்ளக அறிக்கையை வெளியிட்டமைக்காக மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்.

அவ்வறிக்கையை ஆதரிப்பவர்களிலும் எதிர்ப்பவர்களிலும் பலர் இந்த அறிக்கையைப் பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகளை அறிந்திருக்கலாம். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் அறிக்கையின் உள்ளடக்க சாராம்சத்தையாவது அறிந்திருக்க மாட்டார்கள்.

இறுதிக்கட்ட போரின் போது ஐ.நா சாதாரண மக்களின் உயிர்களை பாதுகாப்பதில் தவறிவிட்டது என்பதே இந்த அறிக்கையின் சாராம்சமாக இருந்த போதிலும் இதனால் மற்றொரு முக்கிய திருப்பம் ஏற்பட்டு வருகிறது. இறுதிக் கட்டப் போரின் போது இடம் பெற்றதாக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற குரல் இவ்வறிக்கையோடு மீண்டும் எழ ஆரம்பித்துள்ளமையே அந்த முக்கியத்துவமாகும்.

கடந்த மார்ச் மாதம் வரை போர்க் குற்றங்கள் தொடர்பான “சர்வதேச விசாரணை“ என்ற குரல் சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் ஒலித்துக் கொண்டு இருந்தது. ஆனால் கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவினால் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டும் என்றே கூறுகிறது. அதாவது அப்பிரேரணை மேற்படி சம்பவங்களைப் பற்றி “உள்நாட்டு விசாரணை” நடத்தப்பட வேண்டும் என்றே பரிந்துரைத்தது.

ஏனோ தெரியாது, அது வரை மேற்படி போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று குரல் எழுப்பிக் கொண்டு இருந்தவர்கள் அனைவரும் இந்த அமெரிக்க பிரேரணையை ஆதரித்தார்கள். இலங்கை அரசாங்கம் இந்தப் பிரேரணையை எதிர்த்ததன் காரணமாக அதனை ஆதரிக்க வேண்டும் என்ற வெறியால் அவர்கள் உந்தப்பட்டு இருந்தார்களேயல்லாமல் அப்பிரேரணையை ஆதரிக்க அவர்களுக்கு வேறு காரணங்கள் இருக்கவில்லை.

இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவும் கடந்த வருடம் வெளியிடப்பட்ட தமது அறிக்கை மூலம் சர்வதேச விசாரணையையே வலியுறுத்தியிருந்தது. ஆனால் இந்தோனேசியாவின் முன்னள் சட்ட மா அதிபர் மர்ஸுகி தருஸ்மன் தலைமையிலான அந்தக் குழுவும் பின்னர் உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தும் மேற்படி அமெரிக்க பிரேரணையை ஆதரித்தது.

இலங்கையிலுள்ள தமிழ் மற்றும் சில இடதுசாரி அரசியல் கட்சிகளும் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளும் மனித உரிமை கண்காணிப்பகம் உட்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இதேபோல் சர்வதேச விசாரணையை வலியுறுத்திக்கொண்டு இருந்து பின்னர் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அமெரிக்க பிரேரணையை ஆதரிக்கலாயின.

சர்வதேச அபிப்பிராயங்களை கட்டுப்படுத்துவதில் அமெரிக்காவுக்குள்ள செல்வாக்கையும் மனித உரிமை விடயத்தில் அமெரிக்க பிரேரணையை ஆதரித்தவர்களின் ஆழத்தையும் இந்த விடயம் நன்றாக எடுத்துக் காட்டியது. அதன் பிரகாரம் இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களைப் பற்றி

**—எஸ்.எம்.ஐயூப்**

சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற குரல் அடங்கி விட்டது. ஆனால் கடந்த வாரம் வெளியாகிய ஐ.நா உள்ளக அறிக்கையை அடுத்து அந்தக் குரல் புத்துயிர் பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த அறிக்கையைப் பற்றிய முதலாவது செய்தி பீ.பீ.சி.யிலேயே வெளியானது. அந்த செய்தியில் ஓரிடத்தில் இலங்கைக்கான முன்னாள் பீ.பீ.சி செய்தியாளர் பிரான்ஸஸ் ஹரிஸன் மேற்கோள் காட்டப்பட்டுள்ளார். உள்ளக அறிக்கையை அடுத்து “ஐ.நா.வின் பாதிக்கப்பட்ட நற்பெயரை பாதுகாக்க பான் கீ மூனுக்கு இப்போதுள்ள ஒரே வழி 2009ஆம் ஆண்டில் பல்லாயிரக்கான சாதாரண மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச விசாரணையொன்றை நடத்துவது மட்டுமே” என ஹரிஸன் அதில் கூறியிருக்கிறார்.

அதனை அடுத்து அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமை கண்காணிப்பக நிறுவனம் இந்த உள்ளக அறிக்கை விடயத்தில் தமது அபிப்பிராயத்ததை வெளியிட்டு இருந்தது. அதிலும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

“போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தருஸ்மனின் தலைமையிலான குழு செய்திருந்த பரிந்துரையை இந்த உள்ளக அறிக்கை மேலும் வலுப்பெறச்செய்துள்ளது” எனக் கூறும் மனித உரிமை கண்காணிப்பக நிறுவனம் “அதனை செய்ய பான் கீ மூன் தவறும் பட்சத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை தமது 2013ஆம் ஆண்டு மார்ச் மாத அமர்வின் போது அவ்வாறானதோர் பொறிமுறையை உருவாக்க வேண்டும்“ என்று கூறுகிறது.

தருஸ்மனின் தலைமையிலான குழு செய்திருந்த பரிந்துரையைப் பற்றி மனித உரிமை கண்காணிப்பகம் இவ்வாறு கூறிய போதிலும் தருஸ்மன் இன்னமும் இந்த உள்ளக அறிக்கையைப் பற்றி எதுவும் கூறவில்லை. இந்த விடயத்தில் இறுதியாக அவர் உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தும் அமெரிக்க பிரேரணையை தான் ஆதரித்திருந்தார்.

மனித உரிமை கண்காணிப்பக நிறுவனத்தை அடுத்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச விசாரணையொன்றை நடத்த வேண்டும் என்று கடந்த வாரம் கூறியிருந்தது.

இப்போது தமிழ்நாட்டிலிருந்தும் இந்தக் கோரிக்கை கேட்கிறது. அவ்வளவு பெரிய கட்சியாக இல்லாவிட்டாலும் அபிப்பிராயங்களை வளர்ப்பதில் சற்று முன்னணியில் இருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியே கடந்த சனிக்கிழமை அந்தக் கோரிக்கையை விடுத்திருந்தது.

ஆனால் இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த பிரேணையின் மூலம் சர்வதேச விசாரணை என்ற நிலையிலிருந்து உள்நாட்டு விசாரணை என்ற நிலைக்கு முழு உலகையே தள்ளிய அமெரிக்கா இன்னமும் இந்த ஐ.நா. உள்ளக அறிக்கையைப் பற்றி எதுவும் கூறவில்லை. அது இலங்கை அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான நிலைமையாகும்.

போரின் இறுதிக் கட்டத்தின் போது போரில் சம்பந்தப்பட்ட இரு சாராரும் போர்க் குற்றங்களை புரிந்ததாக மேலோட்டமாக கூறும் தருஸ்மனின் அறிக்கையும் அமெரிக்கப் பிரேரணையும் இந்த உள்ளக அறிக்கையும் அதைப் பற்றிய மனித உரிமை கண்காணிப்பக நிறுவனத்தின் செய்திக் குறிப்பும் இவையெல்லாம் அரசாங்கம் செய்தவற்றை தனித்தனியாக குறிப்பிட்ட போதிலும் புலிகள் எவ்வாறு போர்க் குற்றங்களை புரிந்தார்கள் என்பதை கூற முற்படுவதில்லை என்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# கூடங்குள அணுமின் நிலையப் பாதிப்பைத் தடுக்க இலங்கையும் இந்தியாவும் கூட்டு முயற்சி

**- அமைச்சர் சம்பிக ரணவக்க தகவல்**

எதிர்வரும் இரு வருட காலத்தில் மருத்துவம்-விவசாயம்- தொழில்நுட்பம்- கைத்தொழில் அடங்கலான பல்வேறு துறைகளின் மேம்பாட்டுக்கான அணு தொழில்நுட்பத்தை அதிகளவில் பயன்படுத்த இந்தியா உதவ இணங்கியுள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அணுஉலைகளினால் ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் அது தொடர்பில் இணைந்து செயற்பட இலங்கையும் இந்தியாவும் கவனம் செலுத்தியுள்ளதாக கூறிய அவர் இலங்கையில் நடைபெற உள்ள அடுத்த பேச்சுவார்த்தைக்கு முன்னர் இது தொடர்பில் வரைபொன்றை தயாரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள அணு உலைகள் தொடர்பில் புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை- இந்திய அணுசக்தி அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை கடந்த வாரம் நடைபெற்றது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மின் சக்தி எரிசக்தி அமைச்சில் நடைபெற்றது.

இங்கு அணு சக்தி அதிகார சபைத் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன உட்பட அணு சக்தி அதிகாரசபை அதிகாரிகள் கலந்து கொண்டனர். அமைச்சர் மேலும் கூறியதாவது :-

உலகில் மின் உற்பத்தி தவிர பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அணுசக்தி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையிலே உள்ளது. 6 ஆயிரம் மெகாவோர்ட் மின் உற்பத்தி செய்யும் ஆசியாவின் மிகப் பெரிய அணு உலையான கூடங்குளம் கல்பிட்டியில் இருந்து 225 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கல்பாக்கம் அணு உலை 300 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

இவற்றிலிருந்து ஏதும் அணுக்கசிவுகள் ஏற்படும் பட்சத்தில் அதனால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் பொறுப்பு எமக்குள்ளது. சர்வதேச அணுசக்தி உடன் பாடுகளில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன.

எனவே அணு கசிவு ஏற்படும் பட்சத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

எனவே இது தொடர்பாக இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச் சாத்திட நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

அணுக்கசிவு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் இரு நாடுகளும் ஆராய்ந்தன என்றும் அமைச்சர் கூறினார்.

# பண மோசடியில் ஈடுபட்ட ஐந்து ரஷ்யர்கள் விளக்கமறியலில்


தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர அட்டையைப் பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 5 ரஷ்யப் பிரஜைகளை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர அட்டையைப் பயன்படுத்தி பல மில்லியன் ரூபா பண மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்த ஐந்து ரஷ்ய பிரஜைகளும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

வெள்ளவத்தையில் கைதுசெய்யப்பட்ட இந்த சந்தேக நபர்கள் 250 போலி கடன் அட்டைகள், 6 மடிக்கணினிகள், 2 இரகசிய குறியிடும் கருவிகள், 2.5 மில்லியன் ரூபா பணம், 5000 யூரோ பணத்தையும் தங்கள் வசம் வைத்திருந்தனர்.

கம்போடியா மற்றும் வியட்நாம் பங்காளர்களுடன் இணைந்தே இவர்கள் இந்தப் பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுக்கின்றது.

இலங்கையிலுள்ள தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரத்திலிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும் 25,000 அமெரிக்க டொலர்களை சந்தேக நபர்கள் தங்கள் வசம் வைத்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் அதிபர் திருமதி சோமாவதி கிருபாணந்தன், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் படத்தில் காணலாம். (உடுவில்)

# பாதை அனுமதிப் பத்திரம் இல்லாத தனியார் பஸ்களுக்குத் தடை

**- தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் யாழ்ப்பாணத்தில் அறிவிப்பு**

அனுமதிப் பத்திரமின்றி செலுத்தப்படும் தனியார் பஸ்களுக்கு தடை விதிக்கப்படவுள்ளது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் தேமுனு விஜயரட்ன தெரிவித்தார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் தனியார் பஸ் உரிமையாளர்களுடான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"தனியார் பஸ்களுக்க அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வழித் தரிப்பிடங்களில் மாத்திரமே பஸ்களை நிறுத்த முடியும். அவ்வாறு அனுமதி பத்திரத்தில் நிறுத்தப்படாத பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் பஸ்களுக்கான சுற்று நிருபம் தலைவரினால் வெளியிடப்பட்டது.

இச்சுற்று நிருபம் பொலிஸாரின் ஊடாக பஸ்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. முதல் 2 வாரங்களுக்கு சுற்று நிருபம் குறித்து பஸ் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது.

அறிவுறுத்தலின் பிரகாரம் பஸ் உரிமையாளர்கள் வழிப்பாதை சட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும். பஸ் உரிமையாளர்கள் பொலிஸாருடன் முரண்படாது சமாதானமாக கட மையாற்ற வேண்டும்.

யாராக இருந்தாலும் சட்டத்தினை மதித்து நடக்க வேண்டும். சட்டத்திற்கு எதிராக நடக்க முடியாது. தனியார் பஸ் உரிமையாளர்கள் மேலதிகமாக பஸ்களை கொள்வனவு செய்ய வேண்டாம்.

யாழ். மாவட்டத்தில் தேவைக்கு அதிகாமான பஸ்கள் இருப்பதால் போக்குவரத்து நேர கணிப்புக்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதனால், அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவினால், தீர்வுகள் கிடைக்காவடின் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைளும் எடுக்கலாம்.

அதற்காக பிரச்சினைகளை ஏற்படுத்தி விட்டு தாம் செய்தவை சரி என்று எடுத்துக் கொள்ள கூடாது.

அத்துடன், பஸ் உரிமையாளர்கள் சீருடை அணிவதும் பஸ்களுக்கு உரிய வர்ண பூச்சினை நடைமுறைப்படுத்துவதும் அவசியம். அதற்கான ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும். சீருடை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

இந்த கலந்துரையாடலில், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரேரா, சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ரணவீர, யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்க பிரதிநிதிகள் உட்பட் பலர் கலந்துகொண்டனர்.

# கொத்மலையில் 243 பேர் இடம்பெயர்வு

மண்சரிவு ஏற்பட்டுள்ளதை அடுத்து கொத்மலை வேவண்டன் தோட்டத்தில் 51 குடும்பங்களை சேர்ந்த 243 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள தாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. அந்தத் தோட்டத்திலுள்ள மலை யின் ஒருபகுதியிலேயே மண் சரிவு ஏற்பட்டுள்ளது என்று அந் நிலையம் அறிவித்துள்ளது.

# ஜனாதிபதிக்கு வாழ்த்து

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த நாளும், 2ஆவது வருட ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வுகளுக்குமான விசேட நிகழ்ச்சி யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முஹிதீன் ஜூம்மாப் பள்ளியில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும்.

ஜே/86, ஜே/87 பிரிவு கிராம அலுவலர் எம்.எஸ்.எம்.ஜினூஸ் தலைமையில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் நடைபெறும்.

இந்நிகழ்வில் விசேட துவா பிரார்த்தனை மௌலவி அப்துல் அஸீஸ் நிகழ்த்துவார். விசேட அதிதியாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்துகொள்வார்.

- மீரான்

# தெரிவுக் குழுவிலுள்ள எதிரணிக்கு ஆலோசனை வழங்கக் குழு

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெற்றுள்ள எதிரணி உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டத்தரணிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்திலுள்ள எதிர்கட்சி தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே சட்டத்தரணிகள் குழு நியமிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு எதிரவரும் 23 ஆம் திகதி சமூகமளிக்குமாறு பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் அந்த திகதிக்கு முன்னர் சட்டத் தரணிகள் குழு நியமிக்கப்படும் என்றும் எதிர்கட்சி தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது.

# இலங்கை தொடர்பான ஐ.நா.வின்...

*(6ஆம் பக்க தொடர்ச்சி)*

போரின் இறுதிக்கட்டத்தின் போது வெளிநாட்டமைச்சராக இருந்த ரோஹித்த போகொல்லாகம இந்த உள்ளக அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிடும் போதும் இந்தக் குற்றச்சாட்டை புதுப்பித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் போலன்றி வடக்கில் பின்வாங்கும் புலிகள் தம்மோடு பல்லாயிரக்கான மக்களையும் போர்களத்திற்கு இழுத்துச் சென்றிருக்காவிட்டால் சாதாரண மக்களின் உயிரிழப்புக்களை குறைத்திருக்கலாம் என்றும் புலிகள் மக்களை கேடயமாக பாவித்தமை தொடர்பாகவும் அதன் போது புலிகள் ஐ.நா. அதிகாரிகளையும் கூட கடத்திச் சென்றமை தொடர்பாகவும் உள்ளக அறிக்கை மௌனம் சாதிப்பதாக அவர் மேலும் கூறியிருக்கிறார்.

போர்க் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகள் விடயத்தில் இதுவரை இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் தம்மை பாதுகாத்துக் கொண்டு வந்துள்ளது.

ஆனால் இலங்கையினால் ஐ.நா. தம்மையே விசாரணைக்குள்ளக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் பிரச்சினை இப்போது சற்று சிக்கலாகவே இருக்கிறது.


தாமே தயாரித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை இதைவிட முறையாக நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் கடந்த மார்ச் மாதத்தில் போல் அமெரிக்கா மீண்டும் கைகொடுக்கலாம். இல்லாவிட்டால் பிரச்சினை சற்று க்'டமாகிவிடும்.

ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இலங்கையின் பொருளாதார வளங்களை சூறையாட வாய்ப்பு இருக்கும் வரை அந்நாடுகள் லிபியா, ஈராக் போன்ற நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததைப் போல் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

லிபியா, ஈராக் போன்ற நாடுகளும் எண்ணெய் வளத்தை சூறையாட அமெரிக்கவிற்கு இடமளித்து இருந்தால் கடாபியும் சதாம் "ஹஸைனும் இன்னமும் பதவியில் இருக்கக்கூடும்.

# பயங்கரவாதத்துக்கு எதிரான நம்பிக்கைமிகு ஆயுதம், "தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதே"

"பயங்கரவாதத்துக்கு எதிரான மிகவும் நம்பிக்கையான ஆயுதம், அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவது" என்ற 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியிருந்தார்கள். அந்த வருடம் கொழும்பிலுள்ள காலிமுகத் திடலில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியிருந்தார் ஜனாதிபதி இவ்வாறு கூறி மூன்று வருடங்கள் கழிந்த பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்தது. வன்னியின் முள்ளிவாய்க்காலுக்குள் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்தது.



யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்களுக்கு மேல் கடந்துவிட்டன. ஜனாதிபதியின் பதவிக் காலத்திலேயே சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், இனப்பிரச்சினை தொடர்பாகச் சரியான பார்வையைக் கொண்டவருமான பேராசிரிய திஸ்ஸ விதாரன இந்தச் சர்வகட்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இந்தச் சர்வகட்சி மாநாட்டோடு தொடர்புபட்ட நிபுணர்கள் கமிட்டி பெரும்பான்மை உறுப்பினர்களின் அனுசரணையுடன் ஓர் அறிக்கையையும் கையளித்திருந்தது.

2006இல் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. பதினேழு பேரைக் கொண்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் கமிட்டியில் பதினொரு பேர் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர். இந்த அறிக்கை வெளிவந்து மூன்று வருடங்களின் பின்னர்தான் யுத்தம் முடிவுக்கு வந்தது. சர்வகட்சி பிரதிநிதிகள் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற்ற காலங்களிலும் கடும்போக்குச் சிங்களத் தீவிரவாதக் கட்சிகள் இனவாதக் கூச்சல்களைக் கிளப்பின. இப்போது மீண்டும் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை மையப்படுத்தி ஏட்டிக்குப் போட்டியான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

2006ஆம் ஆண்டு இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சர்வகட்சி மாநாடு நடைபெற்ற காலகட்டத்தில் தமிழர்களை இந்தியாவிலிருந்து வந்த வந்தேறு குடிகளென்று கேலி செய்த முட்டாள்தளமான சிங்களக் கடும்போக்காளர்களும் அரசியல் முனைகளில் இருக்கவே செய்தார்கள். சிங்கள மக்கள் மட்டுமே இந்த நாட்டின் பூர்வீகக் குடிமக்களென்ற தோரணையில் அந்த சிங்களக் கடும்போக்கு அரசியல்வாதிகள் தம்பட்டமடித்தார்கள். மறுமுனையில் தமிழ்க் கடும்போக்கு அரசியல்வாதிகளும் "ஆண்ட தமிழினம் மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்று காட்டுக் கூச்சல்களைக் கிளப்பினார்கள்.

இருதரப்பு இனவாதமும், இனவெறியும் ஒன்றிலொன்று தங்கியிருந்தே செழித்து வளருபவை. 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா, அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் ஒப்பந்தமொன்றினைச் செய்துகொண்டு, நியாயமான தமிழ்மொழி உபயோக மசோதாவைக் கொண்டுவர முனைந்தபோது அதனை ஒரு பேராசிரியர் எதிர்த்து உண்ணாவிரதமிருந்தார். அவர்தான் பேராசிரியர் ஏ.எப்.ஜெயசூரியா.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட காலங்களிலெல்லாம் எதிர்ப்புக் குரல்களும் எழுந்தே வந்திருக்கின்றன. இன்றும் அதுதான் நடைபெறுகிறது. இன முரண்பாடுகளும், இன முறுகல் நிலையும்தான் இந்த நாட்டையே சீரழித்தது.

"பயங்கரவாதத்துக்கு எதிரான மிகவும் நம்பிக்கையான ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதே" என்று ஜனாதிபதி அன்று சொன்ன வார்த்தை என்றுமே நியாயமானது.

ஜனாதிபதியிடம் செயலாற்று அதிகாரம் இருக்கிறது. சட்டவாக்க சபையான பாராளுமன்றத்துக்கும் அவரே த்லைவர். பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இருக்கிறது. கிட்டத்தட்ட பதினேழு கட்சிகள் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருக்கின்றன. கடும்போக்குச் சிங்களக் கட்சிகளும் பங்காளிக் கட்சிகளாக உள்ளன. தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டுமென்று கோரும் தமிழ்க் கட்சியும் அரசில் அங்கம் வகிக்கிறது. முஸ்லிம் கட்சிகளும் அரசின் பங்காளிக் கட்சிகளாக உள்ளன. எனவே ஐக்கியமும், போராட்டமும் என்ற சூழ்நிலையே அரசாங்கத்துக்குள்ளும் நிலவுகிறது.

இத்தகையதொரு சூழலில்தான் சர்வதேசத்தின் பார்வையும் இலங்கை மீது மீண்டும் திரும்பப்பட்டிருக்கிறது. இலங்கைக்குள் மோதல்களை உசுப்பி விடுவதற்கான முன்முயற்சிகளுக்கு தமிழகம் களமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் பிரதேச ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் சீர்குலைக்கும் வகையில் 1960 களின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் தனிநாட்டுக்கு கோஷத்தை தி.மு.க. முன்வைத்தது. ஹிந்தி தேசிய் மொழியாக்கப்பட்டதையடுத்து பிரிவினைக் கோஷத்தை தி.மு.க. முன்னெடுத்துச் சென்றது.

இலங்கையில் பிரிவினைக்கு எதிரா[illegible] ஆறாவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டதைப் போன்று, இந்தியாவில் பதினாறாவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் தி.மு.க. பிரிவினைக் கோஷத்தைக் கைவிட்டது. ஆனால் சீனா, இந்தியா மீது யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டதால், தேசத்தின் ஐக்கியத்துக்காக தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டதாக தி.மு.க. கதையளந்தது. 1962 இல் இடம்பெற்ற இந்திய - சீன யுத்தம் தி.மு.க. தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட உதவியது என்று வைத்துக் கொண்டாலும் கூட அதற்குப் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கை இயற்கையாகவே மரணித்துப் போய்விட்டது.

இலங்கையில் நாடு பிரிவினையால், அதாவது தமிழீழப் போராட்டத்தை உசுப்பிவிடுவதற்கான அனைத்து முன்முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்று கோருவது தனிநாடோ, தமிழ் ஈழமோ அல்ல. பயங்கரவாதம் மீண்டும் தலையெடுக்காமல் தடுக்க வேண்டுமானால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியதுபோல் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். - **அருளாந்தன் அருண்**

# மனித உரிமைக் கண்ணோட்டத்தில் மீள்குடியேற்றம்

**ம**னித உரிமைகள் பல்வேறு வகையான அம்சங்களை உள்ளடக்கியிருப்பினும், அதன் பொதுவான இலக்கு மக்கள் கௌரவமான வாழ்க்கையொன்றை வாழ வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தல் ஆகும். மனித உரிமைகள் பாரபட்சமின்றி மதிக்கப்படவும், பாதுகாக்கப்படவும் மற்றும் பயன்பெறச் செய்யப்படவும் வேண்டும்.

மிக அண்மைக் காலமாக எமது நாட்டில் மீள்குடியேற்றத் திட்டங்கள் அதிகம் அமுல்படுத்தப் படுவதோடு அதிக சவால்களை எதிர்நோக்கும் ஒரு விடயமாகவும் மாறியுள்ளது. இலங்கையில் மூன்று தசாப்தங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்ற கொடூர யுத்தத்தின் காரணமாக பெருந்தொகையான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தின் காரணமாக மீண்டும் தங்கள் சொந்த இடங்களை நாடி வருகின்ற படியால் மீள்குடியேற்றத் திட்டங்கள் அவசர அவசரமாக அரசினாலும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகள் பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், மீள்குடியேற்றத் திட்டங்களின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில், வீட்டு வசதிக்கான உரிமையானது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்ற ஒன்றாக மாறியுள்ளது. மக்கள் கௌரவமானதும் பாதுகாப்பானதுமான வீடொன்றில் வாழ்வதற்கு உதவுகின்றதான வீட்டு வசதிக்கான உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகளாகும். பாதுகாப்பாகவும் அமைதியாகவும் மற்றும் கௌரவமாகவும் எங்காவது ஓரிடத்தில் வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையே இதுவாகும். இவ்வுரிமையானது இலங்கையில் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பல பொருத்தணைகளின் ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1989 ஆம் ஆண்டில் இலங்கை இச்சமவாயத்தை ஏற்று அங்கீகரித்த பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்தின் (ஐஉநளஉச) பிரிவு ஐஐ (1) மிக முக்கியமானதொன்றாகும்.

ஒருவர் தனது வீட்டிலிருந்து காணியிலிருந்து அல்லது வழக்கமான வசிப்பிடத்திலிருந்து எதேச்சாதிகாரமாக வெளியேற்றப்படுவதற்கு எதிராகப் பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக உள்ளவர்கள் தாமாக முன்வந்து தமது வீடுகளுக்கு, காணிகளுக்கு அல்லது வழக்கமான வசிப்பிடத்திற்குத் திரும்புவதற்கு விரும்புகின்றபோது அவ்வாறு திரும்புவதற்கு அரசுகள் அனுமதிக்க வேண்டும்.

எல்லா அகதிகளும், இடம் பெயர்ந்த ஆட்களும் தன்னிச்சையாக எமது வீட்டிற்கு, காணிக்கு அல்லது வழக்கமான வசிப்பிடத்திற்கு பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் திரும்பி வருவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். பாதுகாப்பும் கௌரவமானதுமான தன்னிச்சைப்படியான திரும்பி வருதலானது சுதந்திரம், அறிவிப்பு, தனிப்பட்ட தெரிவு என்பவற்றின் அடிப்படையில் காணப்படுதல் வேண்டும்.

அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் தனது சொந்த நாடுகளில் அல்லது இடத்தில் நிலவும் பௌதீக மூலப்பொருள் மற்றும் சட்ட பாதுகாப்பு விடயங்கள் பற்றிய முழுமையானதும் புறவயமானதும் மிகச்சரியானதுமான தகவல்களை வழங்குதல் வேண்டும். அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் திரும்பி வருவதனை விட இடம்பெயர்வுக்கு செயற்றிறன் மிக்க நீடித்த தீர்வுகளை அவர்களது வீட்டு வசதி, காணி மற்றும் ஆதனம் தொடர்பான மீட்டளிப்பு உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பெற்றுக் கொள்ள இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும்.

போதியளவான மீள்குடியேற்றத்திற்கான கோட்பாடுகளை பல்வேறு தோற்றுவாய்களில் கண்டு கொள்ள முடியும். அவைகளிலொன்றே இடப்பெயர்வை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் முழுமையான மனித உரிமைகள் வழிகாட்டி நெறிகள் ஆகும். அபிவிருத்தித் திட்டங்கள் அடிக்கடி வெளியேற்றங்களுக்கு இட்டுச் செல்வதனால் இவ்வழிகாட்டி நெறிகள் அவசியமானவையாகக் கருதப்படுகின்றன.

# மிகுந்த பாதுகாப்பினால் இலங்கையை வழிநடத்தும் ஏழாண்டு காலத் தலைமைத்துவத்திற்கு

# எம் மரியாதைக்குரிய வணக்கம்

"தேசத்தின் திசைகளெங்கும் வாழும் இலங்கைவாழ் மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுத் தந்து, பாதுகாப்புமிக்க உணர்வினை நிலைபெறச் செய்து, வெற்றி கொண்ட தேசத்தின் ஆச்சரியமிக்க அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய தொலைநோக்கும் தலைமைத்துவத்தினை வழங்கி, ஏழாண்டு காலம் தங்கள் சிரமேற்கொண்ட உயர் பணிக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவிப்பதுடன், மேன்மைக்குரிய இப்பணி மென்மேலும் பலம் பெற்று, பல யுகங்களாகத் தொடர்ந்திட இத் தேசத்தின் காப்புறுதியின் முன்னோடியான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் இதயபூர்வமான வாழ்த்துக்கள்."



ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 19.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இலங்கை பாதுகாப்பான நாடு என சர்வதேசம் அங்கீகாரம்

**ஜி.எல்.பீரிஸ்**

இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே இங்கிருந்து தஞ்சம் கோரிச் செல்வோரை சர்வதேச நாடுகள் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நல்லுறவு மிகுந்த ஆரோக்கியமாக தொடர்வதாகவும் இது சீனாவுடனான இலங்கையின் நல்லுறவை எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார். பிரித்தானியா, சுவிஸ்லாந்து உட்பட பல்வேறு நாடுகள் பெரும் எண்ணிக் கையான இலங்கையர்களை திருப்பியனுப்பியுள்ளன. இலங்கை பாதுகாப்பான நாடு என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாலேயே அந்த நாடுகள் இலங்கையர்களைத் திருப்பியனுப்பி வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:- இலங்கையில் சமாதானத்தையும், நிலைப்புத் தன்மையையும் உறுதிப்படுத்த அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை பல வெளிநாடுகள் வரவேற்று பாராட்டியுள்ளன. இலங்கை பாதுகாப் பான, அமைதி நிலவும் நாடு என்பதையும் அந்நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனாலேயே பல நாடுகளிலிருந்து இலங்கையர்கள் நாடு திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். இவ்வாறு நாடு திருப்பும் நடவடிக்கைகளுக்கு எதிராக சில சக்திகள் அந்நாடுகளில் நீதிமன்றம் சென்றன. எனினும், அதனை ஏற்றுக்கொள்ளாத அந்நாடுகள் இலங்கையானது மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான நாடு. எனவே சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் என அறிவித்தன. அதேபோல, சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்பவர்களைத் தடுப்பதற்கு அவுஸ்திரேலியாவுடன் இணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம். புகலிடக் கோரிக்கை நடைமுறைகள் நிராகரிக்கப்பட்டவர்களை நாட்டுக்குத் திருப்பியனுப்புமாறு அந்நாட்டுக்கு நாம் கூறியுள்ளோம்.

இவ்வாறான கடும் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுக்க முடியாது என்பதையும் அவுஸ்திரேலிய அரசுக்கு நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். சட்ட விரோத படகுகளில் செல்பவர்களைத் தடுப்பதற்கும், கடல் மார்க்கமான கடத்தல்களையும் தடுப்பதற்கு இலங்கை கடற்படையினர் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை எமது பிராந்திய நாடுகள் வரவேற்றுள்ளன என்றார்.

# இராணுவத்தில் இணைந்த தமிழ் பெண்களுக்கு ரூ.30,000 க்கு மேல் சம்பளம்

தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளும் இராணுவத்தில் இணைந்துள்ள தமிழ்ப் பெண்களுக்கு முப்பதாயிரத்துக்கு மேல் சம்பளம் கிடைக்கும். அத்துடன் உடை, உணவு, போக்குவரத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்று கிளிநொச்சிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.

109 வடபகுதி நிகழ்வு கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்றபோது அங்கு உரையாற்றிய மேஜர் ஜெனரல் உதய பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

இன்று கண்ணீர்விட்டபடி தமிழ்ப் பெண்களை பெற்றோர் இராணுவத்தில் சேர்த்துள்ளனர். இது ஒரு கௌரவமான தொழில். அதனால் தமது பிள்ளைகளை இராணுவத்திடம் வழங்கியுள்ள தாய்மார்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

உலகில் எந்த இடத்திற்கும் சென்று இலங்கை இராணுவம் என்று கூறி பெருமைபட முடியும். அந்தளவிற்கு எமக்கு சர்வதேசத்தில் அங்கீகாரம் உள்ளது.

இராணுவத்தில் இணைந்துள்ள தமிழ் பெண்களுக்கு 30 ஆயிரத்திற்கும் மேல் சம்பளம் கிடைக்கும். அது மாத்திரம்றி உடை, உணவு, போக்குவரத்து, சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இலங்கை இராணுவத்தில் 105 பிரிவுகள் உள்ளன. அதில் ஒரு பிரிவு மாத்திரமே ஆயுதம் ஏந்தி போராடும் பிரிவு. ஏனைய பிரிவுகள் அப்படியல்ல. எனவே தமிழ்ப் பெண்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்க மாட்டோம். இராணுவ பயிற்சி அளிப்போம். இவ்வாறு கிளிநொச்சிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா குறிப்பிட்டார்.

# மாகாணசபைகள் மத்திய அரசிடமிருந்தே இன்னமும் நிதியை எதிர்பார்க்கின்றன

**- மத்திய வங்கி ஆளுநர்**

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகள் இன்னும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிதியை மத்திய அரசாங்கத்திடமே எதிர்பார்த்து நிற்கின்றன என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கபரால் தெரிவித்தார். தமது செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதியைக் கூட ஈட்டமுடியாத நிலையிலேயே மாகாண சபைகள் காணப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

பதினைந்தாவது ஆளுநர் மாநாடு கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். நகரிலுள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் வைபவரீதியாக ஆரம்பமாகியது. முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த ஆளுநர் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை வடமாகாண சபை செய்திருந்தது. வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இம்மாநாடு கலாசார அம்சங்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்த ஆளுநர்கள் பங்குபற்றியதுடன் ஆளுநர்களின் செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் என்று அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டுக்காக யாழ். நகரெங்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த மாநாட்டின்போது மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்கள், அவற்றின் செயற்பாடுகள், மாகாண மட்ட அபிவிருத்தித் திட்டங்கள், அவற்றின் அடைவுமட்டங்கள், மாகாண நிர்வாக கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதேவேளை நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 'மாகாணசபைகளூடாக பிராந்திய அபிவிருத்திச் சந்தர்ப்பங்களும் சவால்களும்' என்ற தொனிப் பொருளில் சிறப்புரையாற்றினார். மாலை 2.30 மணியளவில் இந்த சிறப்புரையை மத்திய வங்கி ஆளுநர் நிகழ்த்தினார். இதன் போது அவர் மேலும் குறிப்பிடுகையில், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் விளைவாகவே 15ஆவது ஆளுநர் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை குறிப்பிட்டுக் கூறக் கூடிய முக்கிய முன்னேற்றமாகவே நான் பார்க்கின்றேன். வடக்கில் தற்போது மக்கள் வாழ்க்கை, பொருளாதாரம், கட்டுமானம், சுகாதாரம், சமூக வாழ்க்கை மற்றும் போக்குவரத்து ஆகிய பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கியின் ஆய்வுகள் மூலம் வடக்கு அபிவிருத்தியடைந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

வங்கிகள் எனப் பார்க்கும்போது பல ஆயிரக்கணக்கான வங்கிக்கடன்கள் வடக்கிற்கு அனுமதிக்கப் பட்டுள்ளன. புதிய கட்டுமானங்கள் விவசாயம், தொழில்துறை எனப்பல்வேறுபட்ட பொருளாதார அபிவிருத்திகளுக்கென வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரதிபலனான வடக்கில் சகலதுறைகளிலும் குறிப்பிடத்தக்க வளற்சிகள் ஏற்பட்டுள்ளன.

திட்டமிடல் கல்வி நீர்ப்பாசனம், சுகாதாரம், விவசாயம் கிராமிய அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு பொறுப்புக்கள் மாகாண சபைகளிடம் உள்ளன. எனினும் மாகாண சபைகள் மீது பல குற்றச்சாட்டுகள் உள்ளன. குறிப்பாக மாகாண சபைகளின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.


இறுதியாக நடைபெற்ற நிதி ஆணைக்குழுவின் கூட்டத்தில் மாகாண சபைகளின் தேவைகள், வேலைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டே நிதி ஒதுக்கீடு செய்வது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நிதிச் சமநிலைப் படுத்தலை அடிப்படையாக கொண்டு இதனை செய்ய வேண்டிய தேவை நிதி ஆணைக் குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. இன்னும் மாகாணசபைகள் மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலையில் உள்ளன. மாகாண சபைகளினால் ஈட்டப்படும் வருமானம் போதாமை உள்ளமையே இதற்கு காரணம்.

மாகாண சபைகளுக்கு ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே அரசாங்கம் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றனர். மாகாண சபைகளின் செலவு அம்மாகாண சபைகளின் வருவாயைவிட அதிகமாகவே காணப்படுகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு சதவீதத்தை கூட ஈட்ட முடியாத நிலையில் மாகாண சபைகள் உள்ளன. எனவே மாகாண சபைகளின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நாம் திட்டங்களை முன்னெடுக்கும் போது சிறந்த முறைகளை கையாளவேண்டியுள்ளது. தனியார் துறையினரின் பங்களிப்புடனும் இதனை செய்யக்கூடியதாகவுள்ளது.

எமது நாட்டில் பல்வேறு வளங்கள் உள்ளன அவற்றை திறம்பட பயன்படுத்தி வருமானமீட்ட வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. ஆனால் மாகாண சபைகளின் செயற்பாடுகள் மீது பல குற்றச்சாட்டுகள் உள்ளன. கு[illegible]பாக வருமானம் ஈட்டமுடியாத நிறுவனங்களாக மாகாண சபைகள் காணப்படுகின்றன. இதனால் மத்திய அரசையே மாகாண சபைகள் எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது. இதனால் மத்திய அரசினால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் போது பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இது பல மாற்றங்களை உருவாக்கலாம்.


எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு மாகாண சபைகள் தமது வருமான மட்டத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது என்றார்.





# சாம்சங்: 2013ல் புதிய ப்ராசஸரில் புதிய ஸ்மார்ட்போன்

2012ல் தனது கேலக்ஸி எஸ்3 ஸ்மார்ட் போனை களமிறக்கியது மூலம் ஆன்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களின் அரசனாக சாம்சங் வலம் வந்து கொண்டிருக்கிறது. கேலக்ஸி எஸ்4 என்று ஒரு புதிய ஆன்ட ராய்டு ஸ்மார்ட்போனை வெகு விரைவில் களமிறக்க இருக்கிறது.





வரும் பெப்ரவரி 2013ல் இந்த போன் விற்பனைக்கு வரும் என்று தெரிகிறது. இப்போதே பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும் இந்த போன் ஏராளமான தொழில் நுட்ப வசதிகளுடன் வருகிறது. குறிப்பாக இந்த போனில் 5 இன்ச் அளவில் ஒரு முழுமை யான எச்டி அமோலெட் டிஸ்ப் ளேயைக் கொண்டிருக்கும் என்று தெரிகிறது. மேலும் இந்த எஸ்4 போன்தான் 5 இன்ச் முழு எச்டி அமோலெட் டிஸ்ப்ளையத் தாங்கி வரும் உலகின் முதல் போனாக இருக்கும் என்று தெரிகிறது.

மேலும் இந்த போனில் முதன் முதலாக சிஸ்டம் - ஆன் - எ - சிப் வருகிறது. அதோடு இந்த போனில் குவாட் கோர் ப்ராசஸர் மற்றும் கோர்டெக்ஸ் எ15 சிப் இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த புதிய ப்ராசஸருக்கு அடோனிஸ் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த போன் எல்டிஇ நெட்வொர்க்கைக் கொண்டிருக்கும். அதோடு க்ளர்ஒஎல்இடி என்ற புதிய டிஸ்ப் ளேயையும் இந்த போனில் சாம்சங் அறிமுகம் செய்ய லாம் என்று தெரிகிறது. 2013ல் நடைபெறும் சிஎஸ் நிகழ்வில் இந்த போனை சாம்சங் அறிமுகம் செய்ய இருக்கிறது. மேலும் இந்த போன் 16ஜிபி, 32ஜிபி, 64 ஜிபி மற்றும் 128 ஜிபி ஆகிய மாடல் களில் வருகிறது. மேலும் ஸ்கைப் வசதியுடன் கூடிய 1.9 எம்பி முகப்புக் கேமராவுடன் இந்த போன் களமிறங்க இருக்கிறது. இந்த போனை எதிர்பார்த்து இப்போதே சாம்சங் ரசிகர்கள் காத்திருக்கத் தயாராகிவிட்டார்கள்.

# கூகுளின் அன்ரொயிட் புதிய பதிப்பு



கணனி மற்றும் கைப்பேசி இயங்குதளங்களில் முன்னணி வகிப் பது கூகுளாகும். இந்நிறுவனத்தின் Android இயங்குதளத்தின் புதிய பதிப்பான Android 4.2 Jelly Bean - இனை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் இயங்குதளமானது கூகுளினால் புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள Nexus 4, Nexus 7 மற்றும் Nexus 10 ஆகிய கருவிகளி லும் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. மேலும் இப்பதிப்பில் சில முக்கி யமான அம்சங்கள் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் முன்னய பதிப்புக்களில் எதிர்நோக்கப்பட்ட சிரமமான செயற்பாடுகளும் மாற் றியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



# சாம்சங்கால் அப்பிளுக்கு நெருக்கடி

ஐபோன் மற்றும் ஐபொட்களில் பயன்படுத்தப்படும் மொபைல் ப்ராசஸர்களின் விலை உயரத் தப்பட்டுவிட்டதால் அப்பிள் 20 சதவீத விலை உயர்வை சந் தித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்பிளுக்கான மொபைல் ப்ராசஸர்களை சாம் சங் நிறுவனம் தயாரித்து வழங்குகிறது. தற்போது சாம்சங் அப்பிளுக்கு விற்றுவரும் மொபைல் ப்ராசஸர்களின் விலையை 20 சதவீதம் அதிகரித்துவிட்டதால் அப்பிளுக்க நெருக்கடி.

மேலும் மொபைலின் அப்ளிகேசன் ப்ராசஸரின் விலை ஏற்றத்தைப் பற்றி ஏற்கனவே அப் பிளிடம் பேசிவிட்டதாக சாம்சங் தெரிவிக்கிறது. சாம்சங்கிற்கு மாற்றாக இந்த மொபைல் ப்ரா சஸர்களை தயாரித்து வழங்க வேறு நிறுவனங்கள் இல்லாததால் இந்த விலை ஏற்றத்தை வேறு வழியில்லாமல் அப்பிள் ஏற்றுக்கொண்டுவிட்டது என்று தெரிகிறது.

தனது ஐபோன் மற்றும் ஐபொட் களுக்கான 130 மில்லியன் மொபைல் ப்ராசஸர்களை கடந்த ஆண்டு சாம்சங்கிடமிருந்து ஆப்பிள் வாங்கியது. மேலும் இந்த வர்த்தகத்திற்காக வரும் 2014 வரை சாம்சங் மற்றும் அப்பிள் ஆகிய நிறுவனங்கள் கூட்டு ஒப்பந்தம் செய்திருக்கின்றன.

இந்த மொபைல் ப்ராசஸர்களின் விலை உயர்வால் வருங் காலங்களில் அப்பிளின் புதிய தயாரிப்புகளின் விலையும் அதி- கரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இதை உறுதிப் படுத்தவில்லை.

# தம்பதிகளுக்கு பேஸ்புக்




பேஸ்புக்கின் இமாலய வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக் கிறது. அதுபோல் பேஸ்புக்கின் இணைபவர்களின் எண்ணிக்கை யும் வளர்ச்சி அடைந்து வரு கிறது. இந்த நிலையில் திரு மண தம்பதியினருக்காக என்று ஒரு தனிப் பகுதியை தொடங்கு கிறது பேஸ்புக்.


நண்பர்களை இணைக்கும் பாலமாக இருந்து வந்த பேஸ் புக் தற்போது தம்பதியர்களை இணைக்கும் பாலமாக இருக்கப் போகிறது என்று நம்பலாம். இதன் மூலம் இதில் தம்பதியர் தங்களின் அன்பை பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த தம்பதியர் பக்கங்கள் போட்டோக்கள் மற்றும் போஸ்டு களை மட்டும் தாங்கி இருக்காது. மாறாக ஜோடிகளுக்கு இடையே நடக்கும் கருத்துப் பகிர்வு மற் றும் விமர்சனங்கள் போன்றவை இருக்கும். மேலும் இந்த புதிய பக்கங்கள் தம்பதியினரின் அன்பு வாழ்க்கயையை இன் னும் ஆழமாக்கும் என்று பேஸ் புக் நம்புகிறது.

ஆனால் இந்த புதிய பக்கங் களைப் பற்றி தனது வாடிக்கை யாளர்களுக்கு இன்னும் பேஸ் புக் முறையாக அறிவிக்க வில்லை. ஆனால் இந்த புதிய பக்கங்கள் தம்பதியினரைக் கண்டிப்பாக கவரும் என்று நம் பலாம்.




# PDF கோப்புக்களை Decrypt செய்வதற்கு




ஏனைய கோப்புக்களை விடவும் பாதுகாப்பு கூடிய கோப்பு வகையாக PDF காணப்படுகின்றது. இக்கோப்பிலுள்ள தரவுகளை எளிதில் மாற்றியமைக்கவோ அல்லது அவற்றிலுள்ள தரவுகளை நகல் (Copy) செய்யவோ முடியாது.

இதற்கு காரணம் அக்கோப்புக்களை உருவாக்கியவர்களால் கொடுக் கப்பட்ட கடவுச்சொல் பாதுகாப்பே ஆகும். இதனை மீறி அக்கோப் பினை பிரிண்ட் செய்யவோ அல்லது மாற்றங்களை மேற்கொள்ளவோ முடியாது. எனினும் கடவுச்சொல் பாதுகாப்புக்களையும் மீறி PDF கோப்பு ஒன் றினை தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து பயன்படுத்திக் கொள்வ தற்கு PDF Decrypt எனும் மென்பொருள் வழிவகுத்து தருகின்றது.

இம்மென்பொருள் மூலம் Decrypt nசய்யப்பட்ட கோப்பானது எந்த வொரு PDF Viewer - இலும் ஓப்பன் ஆகக்கூடிதாகவும் காணப்படுகின்றது.

# முந்தைய குரோம் புக்கைவிட குறைந்த விலையில் புதிய குரோம்

கூகுளின் குரோம்புக் லப்டாப்புகள் மிகவும் பிரபலமானவை. இந்த குரோம்புக்குகள் சிறப்பான விற்பனையைப் பெற்று வருகின்றன. இந்த நிலையில் கூகுள் தற்போது ஏசர் சி7 என்று புதிய குரோம் புக்கை களமிறக்கி இருக்கிறது. பழைய குரோம் புக்கைவிட இந்த புதிய ஏசர் சி7 குரோம்புக் மிகவும் குறைந்த விலையில் வருகிறது. இதன் மூலம் ஏராளமான ரசிகர்களைப் பெறலாம் என்று கூகுள் திட்டமிடுகிறது. மேலும் இந்த ஏசர் சி7 குரோம்புக்கை ஏசர் நிறுவனத்தின் கூட்டணியோடு களமிறக்கி இருக்கிறது. இந்த புதிய குரோம்புக் சூப்பரான தொழில் நுட்ப வசதிகளுடன் வருகிறது.

குறிப்பாக இந்த புதிய குரோம்புக் 320ஜிபி ஹார்ட்ரைவ், 11.6 இன்ச் டிஸ்ப்ளே, இன்டல் ப்ராசஸர், 2ஜிபி ரேம், யுஎஸ்பி 3 மற்றும் எச்டிஎம்ஐ போர்ட்டுகள் ஆகியவற்றை வழங்குகிறது. மேலும் 1 கிலோ எடையுடன் வரும் இந்த லேப்டாப் 100ஜிபி கூகுள் ட்ரைவ் க்ளவுட் சேமிப்புடன் வருகிறது. இவ்வளவு வசதிகளுடன் வரும் இந்த ஏசர் சி7 குரோம்புக் மிகவும் குறைந்த விலையுடன் வருகிறது. அதாவது இந்த குரோம்புக்கை 199 அமெரிக்க டாலர்களுக்கு வாங்கலாம். கடந்த மாதம் சாம்சங் அறிமுகம் செய்த குரோம்புக்கை விட 50 அமெரிக்க டாலர்களுக்கு குறைவாக இந்த புதிய குரோம்புக்கை கூகுள் வழங்குகிறது.

இந்த குரோம்புக் மிகவும் குறைந்த விலையில் வருவதால் இது விற்பனைக்கு வரும் 30 நாள்களில் விற்றுத் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள கூகுள் ப்ளே ஸ்டோர், அமேசான் மற்றும் பெஸ்ட் பை போன்ற கடைகளில் இந்த குரோம் புக்கை வாங்கலாம். மேலும் இங்கிலாந்திலும் தற் போது இந்த குரோம்புக் விற்பனைக்கு வந்திருக்கிறது.

# 8 விண்டோஸ் 8 சாதனை படைத்தது

மைக்ரோசாப்டின் விண்டோஸ் 8 வெளியான சில நாட்களிலேயே 40 லட்சம் Windows 8 License Download செய்யப்பட்டதாக மைக்ரோசாப்ட் தலைமை அதிகாரி ஸ்டீவ் பால்மர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், இந்த எண்ணிக்கை தனி நபர்கள் தரவிறக்கம் செய்த உரிமங்களின் எண்ணிக்கை தான். நிறுவனங்கள் பல கோடிக்கணக்கான உரிமங்களை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஓராண்டுக்குள் 40 கோடி புதிய சாதனங்கள் விண்டோஸ் 8 சிஸ்டத்தில் இயங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே போன்று விண்டோஸ் 7, 2009ஆம் ஆண்டில் வெளியான பின்னர் 70 கோடி பதிப்புகள் விற்பனையானது குறிப்பிடத்தக்கது.




கடைசியாக, கண்ணாடிகள் விழுந்து நொருங்குவது போன்ற சப்தம் கேட்டது. மறுநாள் மத்தியானம் பன்னிரண்டு மணிக்குமுன் பண்ணை வீட்டில் ஒரு பன்றி கூட எழுந்திருக்கவில்லை. எப்படியோ அந்தப் பன்றிகள் பணம் சேர்த்து, ஒரு பீப்பாய் சாராயம் வாங்கி விருந்து கொண்டாடினார்கள் என்கிற செய்தி விலங்குப் பண்ணை பூராவிலும் அதி சீக்கிரமாகப் பரவிவிட்டது.

வருடங்கள் சென்றன. பருவங்கள் வந்து போயின. விலங்குகளின் எளிய வாழ்கை ஓடிக் கழிந்த வண்ணமாயிருந்தது. நாளடைவில் க்ளோவர், பெஞ்சமின், மோசஸ் என்கிற காகம், ஒரு சில பன்றிகள் - இவற்றைத் தவிர வேற எந்த மிருகத்துக்குமே புரட்சிக்கு முந்திய நிலைமை எப்படியிருந்தது என்பதே மறந்துவிட்டது. முரியல் இறந்துவிட்டது. பிஞ்ச்பெல், ஜெஸ்ஸி, பிஞ்சர் ஆகியவையும் இறந்துவிட்டன.

ஜோன்ஸ்கூட இறந்துவிட்டான். எங்கேயோ வெகு தூரத்துக்கப்பால் ஒரு குடிகார விடுதியிலே இறந்துவிட்டான் அவன்.

ஸ்நோபாலைப் பற்றி யர்ருக்குமே ஞாபகம் இல்லை. பாக்ஸரைப் பற்றிக் கூட எவ்வித ஞாபகமும் யாருக்கும் இல்லை. அதனுடன் நெருங்கிப் பழகிய ஒன்றிரண்டு மிருகங்களைத் தவிர, க்ளோவர் இப்போது நன்கு பெருத்துவிட்ட கிழட்டுக் குதிரை. அதனால் அதன் அங்கங்களைச் சரிவர அசைக்கக்கூட முடிவதில்லை.

கண்களிலே எப்போதும் நீர் ஒழுகிக்கொண்டேயிருந்தது. ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டிய வயதைத் தாண்டி இரண்டு வருடங்களாகி விட்டது. ஆனால் எந்த மிருகமும் ஓய்வு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. வயதான விலங்குகளுக்காகப் பண்ணையில் ஒரு பகுதியை ஒதுக்கிவைப்பது என்ற பேச்சே இப்போதெல்லாம் யார் காதிலும் விழுவதில்லை. நெப்போலியன் இப்போது சரியான பருவமடைந்துவிட்டது.

முந்நூற்றிருபது பவுண்டு கனம் இருந்தது. ஸ்க்வீலர் மிகவும் பருத்து விட்டதனால் அதன் கண்களைக் கூடச் சதை மூடியிருந்தது. சிரமப்பட்டுத்தான் அது கண்க ளைத் திறந்து எதையும் பார்க்க முடியும்.. கிழட்டு பெஞ்சமின் மட்டுமே எப்போதும் போல இருந்தது. முகத்தில் கொஞ்சம் அதிகமான வெள்ளை விழுந்தி ருந்த மாதிரியிருந்தது. மற்றபடி அது மாறவேயில்லை. பாக்ஸரின் சாவுக்குப்பின் முன்னையும்விட குறைவாகப் பேசியது அது. வாய் திறவாமலும் ஆத்திரத்துடன் இருப்பது போலவும் இருந்தது அது.

பண்ணையிலே ஏராளமான விலங்குகள் இருந்தன. இப்போது, எனினும் விலங்கு உற்பத்தி விகிதம் ஆரம்ப நாட்களில் எதிர்பார்த்தமாதிரி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். புதிதாகப் பிறந்த பல மிருகங்களுக்கு புரட்சி என்பதே மங்கியதோர் பண்டைக் காலத்துச் செய்தியும் மரபும்தான் என்று சொல்ல வேண்டும். மிருகங்கள் சொல்லிச் சொல்லிக் கேட்ட செய்து அது.

(நாளை)

## நடப்பது எல்லாம் நன்மைக்கே!


காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா, வேட்டையாடச் சென்றபோது, கால்விரலில் அடிபட்டு, விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரஜைகளான மிருகங்கள் கூடியிருந்தன. ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பின.

சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது. ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ளநரி, சிங்கராஜாவின் அருகே சென்றதும் பெருமூச்சு விட்டபடி "ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்றது. சிங்கராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

நமது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே, என்று கூறுகிறதே. "பிடி அதை அடைத்துவை, குகைச்சிறையில்!" எனக் கட்டளை இட்டது சிங்கராஜா. வெகுநாட்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகுதூரம் வேட்டைக்கு வந்துவிட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது.

தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டில் கம்பிக்கதவால் மூட்ப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. அப்போது கூண்டில் அடைப்பட்ட சிங்கத்தை, தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர்.


"இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது" எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது" என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுவிட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.



"நமது கால் விரல், இல்லாததால்தான் நம்மை விட்டு விட்டார்கள். "நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்றைக்கு நரி சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது" என எண்ணியது.

உடனடியாக, நரியை விடுவித்தது. "அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள்தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது.

யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.



## சிறுவர் அமுதம்

### 2036-ம் ஆண்டு பூமியில் மோதும்

## ராட்சத விண்கல்



விண்வெளியில் கோடிக்கணக்கான விண்கற்கள் சுற்றி வருகின்றன. அவை எப்போதாவது பூமி ஈர்ப்பு விசைக்குள் வந்து பூமியை நோக்கி வேகமாக வரும். ஆனால் வரும் வேகத்தில் அவற்றில் தீப் பிடித்து நடுவானிலேயே சாம்பலாகி விடும்.

அளவில் சிறிய கற்கள் இப்படி சாம்பலாகி விடுவது உண்டு. பெரிய கற்களாக இருந்தால் எரிந்து சாம்பலாகாமல் அதன் மீதிப் பகுதி பூமியில் விழுவதும் உண்டு. அதுவும் சிறிய அளவே இருப்பதால் பெரிய பாதிப்புகள் எதுவும் சமீப காலங்களில் ஏற்படவில்லை.

இப்போது மிகப் பெரிய ராட்சத கல் ஒன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது விண்ணில் தீப்பிடித்தாலும் கூட கல் பெரிய அளவில் இருப்பதால் பூமிக்கு பெரும் சேதம் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். இந்த கல் 350 மீட்டர் குறுக்களவு உள்ளது. அதன் சுற்று வட்ட பாதையில் இருந்து விலகி கொஞ்சம் கொஞ்சமாக பூமி பக்கமாக வந்து கொண்டிருக்கிறது.

2029-ம் ஆண்டு இந்த கல் பூமிக்கு 30 ஆயிரம் கிலோ மீட்டர் உயரத்தில் வரும். அடுத்த 7 ஆண்டில் மேலும் பூமியை நோக்கி நகர்ந்து 2036-ம் ஆண்டு பூமி சுற்றுப் பாதைக்குள் நுழையும். உடனே புவி ஈர்ப்பால் ஈர்க்கப்பட்டு பூமியில் விழும்.

இதை நடுவானிலேயே அழிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டு உள்ளனர். இதற்கான ஆய்வில் ரஷ்ய வஞ்ஞானிகளுடன் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய விஞ்ஞானிகளும் ஈடுபட்டுள்ளனர்.

சுடோக்கு எண் 97 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 7 | 3 | 9 | 6 | 2 | 1 | 5 |
| 9 | 2 | 3 | 8 | 5 | 1 | 7 | 4 | 6 |
| 5 | 6 | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 2 | 4 | 9 | 5 | 8 |
| 1 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| 4 | 5 | 2 | 9 | 8 | 3 | 1 | 6 | 7 |
| 2 | 8 | 5 | 6 | 1 | 9 | 3 | 7 | 4 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 8 | 6 | 2 | 9 |
| 6 | 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 8 | 1 |

சுடோக்கு எண் 98

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 7 | 3 | 9 | 6 | 2 | 1 | 5 |
| 9 | 2 | 3 | 8 | 5 | 1 | 7 | 4 | 6 |
| 5 | 6 | 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 2 | 4 | 9 | 5 | 8 |
| 1 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| 4 | 5 | 2 | 9 | 8 | 3 | 1 | 6 | 7 |
| 2 | 8 | 5 | 6 | 1 | 9 | 3 | 7 | 4 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 8 | 6 | 2 | 9 |
| 6 | 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 8 | 1 |

# இரண்டு மணிநேர அவகாசத்தில் முஸ்லிம்கள் விரட்டப்பட்ட சம்பவம் கொடுமையானது

## - அமைச்சர் டக்ளஸ்



“மகாத்மா காந்தியைப்போல் ஒரு தலைமைத்துவம் இங்கு இல்லாமை காரணமாக இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பேணப்படாது போயிவிட்டது” என “ராவய்” பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் குறிப்பிட்டிருந்தார்.

இதில் உண்மை இல்லாமல் இல்லை. என்றாலும் எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எல்லா இனங்களையும் அரவணைத்துச் செல்லக் கூடியவர். எல்லா இனங்களும் சமத்துவமாக வரவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டு 22வருட பூர்த்தியை முன்னிட்டு சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் எற்பாடு செய்திருந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதி[illegible]க் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், பசு உன்னைக் கொல்ல வரும்போது அதனை நீ கொல்லலாம் என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார்.அதை ஒத்ததுதான் புலிகள் இயக்க அழிப்பும். மனித சாபக்கேடாக இருந்த இந்த அமைப்பின் அழிவு தவிர்க்க முடியாதது.அதனை அழிப்பது நியாயமாகவும் கடமையாகவும் இருந்தது.

இரண்டு மணி நேரத்துக்குள் முஸ்லிம் மக்கள் வட மாகாணத்திலிருந்து விரட்டப்பட்டமை மிகவும் கொடிய நிகழ்வாகும்.அச் சந்தர்ப் பத்தில் அவ்வாறு விரட்டப்பட்ட மக்களை அரவணைத்து ஆறுதல் கூறியதுடன் அவர்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் அவசிய உதவிகளையும் செய்திருந்தேன். தீவகப்பகுதிகளுக்கு சென்று நான் மக்கள் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில் சகோதர முஸ்லிம் மக்களை மீளக் குடியேற வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன்.அக்கால கட்டத்தில் அவ்வாறு வருவதற்கு அம்மக்கள் தயக்கம் காட்டினர். பின்னர் பயங்கரவாதிகளிடமிருந்து குடாநாடு விடுவிக்கப்பட்டிருந்தபோது ஏ-9 பாதை மூடப்பட்டிருந்ததால் அம் மக்களால் வர இயலவில்லை. இப்போது அப்படியல்ல. தாராளமாக வரலாம்.

மக்களை மீளக்குடியமர்த்துவதில் அரசு இயலுமானவரை அக்கறையுடன் செயற்படுகிறது. என்றாலும் பல தேவைகள் இருக்கின்றன. பல நாடுகளின் தூதுவர்கள் இங்கே வருகை தந்துள்ளனர்.அரசாங்கம் மேற்கொள்கின்ற இம் முயற்சிகளுக்கு இவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வர வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்று எமது மக்கள் விரட்டப்பட்டமைக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஏதோ ஒரு வகையில் நானும் காரணமாக இருந்தேனோ என எண்ணுகின்றேன்.

இம்மக்களது மீள்குடியேற்றம் தொடர்பில் நானும் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷவும்,ரிசாட் பதூதீனும், வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் விசேட திட்டங்களை அமைத்துள்ளோம்.

எனவே எந்தளவிற்கு கூடிய விரைவில் இம் மக்களை மீளக் குடியமர்த்த இயலுமோ அந்தளவுக்கு விரைவாக குடியமர்த்த நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்' கலந்து கொண்டார். மேலும் அமைச்சர்களான எ.எச்.எம். பௌசி, சம்பிக்க ரணவக்க,ரிசாட் பதூதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, எ.எச்.எம். ஹிஸ்புல்லா, வடமாகாண ஆளுநர் ஜி.எ.சந்திரசிறி, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்,கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர், கிழக்கு மாகாண சபை உறுப்பி னர் அமீர் அலி, வெளிநாட்டு தூதுவர்கள்,சமூக அமைப்புக் களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## இன்று சூரசம்ஹாரம்

# சூரன்போர் உற்சவத்தின் தத்துவம்



இறைவனுடைய கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், தீயவர்களை மறக் கருணையாலும் இறைவன் ஆட்கொள்ளுகின்றான். சூரன் தான்பெற்ற பெருவரத்தின் மகிமையால் தேவர்களுக்கும் நல்லவர்களுக்குத் துன்பங்கள் பல புரிந்தான். அவன் இங்ஙனம் பல பாவச் செயல்களை நீண்டகாலம் இவ்வுலகிற் செய்வானாகில் மீளா நரகத்திற்கு ஆளாவான் என்பதையும், தவத்தினால் பல வரங்கள் பெற்ற அவன், மாபெரும் பாவியாகிவிடக்கூடாது என்பதையும் கருணையே உருவமான இறைவன் திருவுளங்கொண்டார். ஆதலின் தேவர்கள் வேண்டுதலுக்கமைந்து அவனை ஆட்கொள்ள வேண்டி குமரப் பெருமானாகத் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினை இரு கூறாக்கினார். ஒரு கூறு மயிலாகவும், மறு கூறு சேவலாகவும் ஆனது. மயிலை வாகனமாகவும், சேவலை கொடியாகவும் தன்னோடு சேர்த்தருளினார். இதனை விளக்கவே ஆலயங்களில் சூரசம்ஹார உற்சவம் நடைபெறுகிறது.


சூரன் ஆணவ மலம் நிறைந்த ஓர் உயிர். ஆணவம் முதிர்ந்த உயிர் ஒருபோதும் இறைவனைக் காணாது. அந்த ஆணவ முனைப்பு ஒடுங்கினால்தான் உயிர் இறைவனைக் காணும். ஆணவ மலம் நிலைநிற்கும் காலம்வரை அது பிறந்து இறந்து, பிறந்து இறந்து பேதமையுற்றுத் தவிக்கும். ஆகவே, அம்முனைப்பாகிய அரக்கனைக் கொன்றாலன்றி உயிருக்குப் பிணி மூப்புச் சாக்காடொழிந்து இறைவனோடு ஒன்றி வாழ இயலாது. அந்த ஆணவ மலத்தைப் போக்கும் ஆற்றலுடையவன் இறைவனே. அவன் உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், ஆணவ மலமாகிய சூரனது தூல உடம்பைக் கொன்று, ஆணவ மலம் நீங்கப் பெற்ற அநாதித் தன்மையுள்ள ஆத்மாவாகிய அவனது உயிரினை தன்னோடு சேர்த்துக் கொள்ளுகிறான்.

சூரனை சுவாமி சங்கரிக்கவில்லை. மறக்கருணையால் அவனை ஆட்கொண்டார் என்பதே சூரன்போரின் தத்துவமாகும்.

*ஆறிரு தடந்தோள் வாழ்க!*
*அறுமுகம் வாழ்க! வெற்பைக்*
*கூறுசெய் தனிவேல் வாழ்க!*
*குக்குடம் வாழ்க! செவ்வேள்*
*ஏறிய மஞ்ஞை வாழ்க!*
*யானைதன் னணங்கும் வாழ்க!*
*மாறிலா வள்ளி வாழ்க!*
*வாழ்க சீரடியா ரெல்லாம்!*

*-பண்டிதர் த. சுப்பிரமணியம்*
*(சைவ சமய புண்ணியகாலம்)*

# கந்த சஷ்டி விரத மகிமை



எந்த வினையானாலும் கந்தன் அருள் இருந்தால் வந்த வழி ஓடும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஆறுமுகனுக்கு உரிய விரதங்களுள் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவது கந்த சஷ்டி விரதம். குறிப்பாக குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்தால் முருகனே குழந்தையாக அவதாரம் செய்வார் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை. இதைத்தான் சஷ்டியில் இருந்தால் அகப்பை (கருப்பை)யில் வரும் என்று பழமொழியாக கூறுவார்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி வசிட்ட முனிவரிடம் இவ்விரதம் பற்றிக் கேட்டறிந்து கடைப்பிடித்து பெரும்பயன் அடைந்தாராம். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்ட பலரும் கடைப்பிடித்த விரதம் இது.

முருகனுக்குரிய விரதங்களில் மிகச் சிறந்தது கந்த சஷ்டி விரதமாகும். ஐப்பசி மாதத்து அமாவாசையை அடுத்த வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாட்கள் கந்த சஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. மாதம் தோறும் சஷ்டி திதியிலும் விரதம் இருக்கலாம். சஷ்டி விரதம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் மகத்தான விரதமாகும்.

தொடர்ந்து ஆறு நாட்கள் அனுசரிக்கப்படும் கந்த சஷ்டி விரதத்தின்போது சிலர் மூன்று வேளையும் உண்ணா நோன்பு இருப்பர். சிலர் பகல் மட்டும் உபவாசமிருந்து இரவில் பால் பழம் உண்டு விரதம் மேற்கொள்வர். இவர்களில் பலர் முருகன் ஆலயத்திலேயே தங்கி விரதம் இருப்பர். உண்ணா நோன்பு மட்டுமல்லாமல் மௌன விரதம் இருப்போர்களும் உள்ளனர்.

விரத காலத்தில் முருக நாம ஜெபம் செய்தல், கந்தபுராணம் படித்தல் நற்பலன் அளிக்கும். ஆறாம் நாள் கந்தசஷ்டி அன்று துயிலாமல் விழித்திருந்து முருகன் பெருமைகளை நினைந்தும் பேசியும் வழிபடுதல் சிறப்பு. முழு உபவாசம் இருக்க முடியாதவர்கள் கந்த சஷ்டி தினத்தில் மட்டுமாவது உபவாசம் இருத்தல் நன்மையைத் தரும். ஏழாம் நாளன்று நீராடி முருகனை வழிபட்டு வெல்லமும் பச்சைப் பயறும் கலந்து களி செய்து உண்டு விரதத்தை முடிக்கலாம். ஆறு நாள்களும் கந்த புராணத்தை முழுமையாகப் படிக்கலாம். கந்த சஷ்டிக் கவசம், கந்த குரு கவசம், சண்முக கவசம் என்பவைகளை பாராயணம் செய்யலாம். திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் கலிவெண்பா, வேல் மாறல் பதிகம், திருவடித் துதி முதலியவற்றைப் பாராயணம் செய்தலும் சிறப்பு தரும். **(இணையம்)**

# ஐ.நா. அறிக்கைக்கு கனடா வரவேற்பு

இலங்கையில் யுத்தம் இடம் பெற்றபோது ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டுள்ள உள்ளக அறிக்கையை கனடா வரவேற்றுள்ளது. இது தொடர்பில் கனடா வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவிக்கையில், “இலங்கை மக்கள் பலவருடங்களாக முகம்கொடுத்து வருகின்ற மனித உரிமை மீறல்களை இந்த அறிக்கை வெளிக்கொணர்ந்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பிலான பொறுப்புகள் தொடர்பில் நான் தொடர்ந்து அவதானத்தை செலுத்தி வருகின்றேன்.

இந்த அறிக்கையானது இறுதி யுத்தத்தின்போது ஐ.நா.மற்றும் அதன் தொண்டு நிறுவனங்களின் இயலாமையை சுட்டிக்காட்டியுள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கவும் எதிர்கால தோல்விகளை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் பரிந்துரைத்துள்ளது“ என்று தெரிவித்துள்ளார்.

# ஜெனீவாவில் எமக்கெதிராக கையுயர்த்திய நாடுகளுடன் நாம் கைகோர்க்க மாட்டோம்

## - அமைச்சர் விமல் வீரவன்ச



ஜெனீவாவில் எமக்கெதிராகக் கை உயர்த்திய நாடுகளுடன் கைகோர்த்துச் செல்ல வேண்டிய அவசியம் இலங்கைக்கு கிடையாது என அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடாத நாடுகளுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டு முன்செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாட்டுத் தலையீடுகளை நாட்டுக்குள் ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைகிறது. வெள்ளையர்களை வைத்துக் கொண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கான திட்டங்களை வகுத்த ஐ.தே.க. போன்று செயற்பட வேண்டிய தேவை எமது அரசாங்கத்துக்குக் கிடையாது

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அவர்கள் அண்மையில் சீனா சென்றிருந்தபோது இலங்கையின் உற்பத்திகளை தமது சந்தைக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கூறப்பட்டது. சீனா ஒருபோதும் இலங்கையின் விடயத்தில் தலையிடுவதில்லை. இதனை அந்நாடு பல தடவைகள் வலியுறுத்தியுள்ளது.சீனா இலங்கையை விழுங்கிவிட்டதாக முன்வைக்கப்படும் கூற்றுக்களில் உண்மை இல்லை. உள்நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடாத நாடுகளுடனேயே கூடுதலான தொடர்புகளைப் பேணி வருகின்றோம் என்றார்.

# உலக பார்வை

# இனப்படுகொலைக் குற்றச்சாட்டில் சிக்கிய இராணுவ தளபதிகள் விடுதலை



யூகோஸ்லாவியாவில் செர்பியர்களை இனப்படுகொலை செய்த போர்க் குற்றச்சாட்டில் சிக்கிய குரேயாவின் இராணுவ தளபதி-களை சர்வதேச நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

செர்பியர்களைப் இனப்படுகொலை செய்த குற்றச்சாட்டில் கடந்த 1995ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் இருவருக்கு தண்டனை விதித்தது.

இந்த குற்றச்சாட்டில் கொடோவினாவுக்கு 24 ஆண்டுகள் சிறை தண்டனையும், மர்காக்குக்கு 18 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது.

இருவரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த மனு மீதான விசாரணயில் சர்வதேச நீதிமன்றம், இருவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கும் போதுமான ஆதாரம் இல்லை என்று கூறி இருவரையும் விடுதலை செய்தது.

இருவரும் விடுதலை செய்யப்பட்ட செய்தியை குரேஷியர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர். ஆனால் செர்பியாவோ இது ஒரு அரசியல் ரீதியான முடிவு என்று கூறியதுடன் ஆறிய காயத்தை கீறிய செயல் என்று விமர்சனம் செய்திருக்கிறது.


# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சம்பளம் 4 இலட்சம் டொலராம்

அமெரிக்காவின் ஜனாதிபத-ியாக பராக் ஒபாமா இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டு உள்ளார். இவரின் அதிகாரப்பூர்வ இல்லமாகவும், அலுவலகமாகவும் 132 அறைகள், 35 குளியல் அறைகளுடன் 18 ஏக்கர் நிலப் பரப்பில் கட்டப்பட்ட வொஷிங்டன் வெள்ளை மாளிகை விளங்குகின்றது.

தொலைதூர வெளிநாட்டு பயணங்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட "ஏர் ஃபோர்ஸ் ஒன்" விமானத்திலும், குறைந்த தூரம் கொண்ட பயணங்களுக்காக உருவாக்கப்பட்ட "மெரைன் ஒன்" ஹெலிகாப்டரிலும் ஒபாமா பயணம் செய்யலாம்.

நாட்டு மக்களிடையே விமானத்தில் இருந்தபடியே பேசுவதற்கு வசதியாக, அனைத்து நவீன தொலைத் தொடர்பு தொழில்நுட்பமும் செய்யப்பட்டுள்ளது.

சாலைவழி பயணத்துக்கென "கெடிலாக் ஒன்" என்றழைக்கப்படும் சிறப்பு கார் உபயோகிக்கப்படுகிறது. நவீன தொலை தொடர்பு சாதனங்கள், தீயணைப்பு கருவி, ஒக்ஸிஜன் செலுத்தும் கருவி போன்ற வசதிகள் இந்த காரினுள் உள்ளன.



அமெரிக்க ஜனாதிபதிக்கு சம்பளமாக ஆண்டுக்கு 4 இலட்சம் டொலர்கள் வழங்கப்படுகின்றது. மேலும் பயணப்படிக்கென 1 இலட்சம் டொலர்களும், அலுவலக விழாக்களுக்கென 19 ஆயிரம் டொலர்களும் உண்டு. சம்பள பணத்திற்கு மட்டும் வரிப்பிடித்தம் செய்யப்படுகின்றது. மற்ற படிகளுக்கு வரி கிடையாது.

கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரத்தின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஆண்டு தோறும் ஓய்வூதியமாக 1 இலட்சத்து 91 ஆயிரத்து 300 டொலர்கள் தரப்படுகின்றது.

அவர்களின் அலுவலகத்திற்கான இடமும், ஊழியர்களுக்கான சம்பளமும், அலுவலக செலவினங்களுக்கான நிதியும், பயணப்படியும் அமெரிக்க அரசு வழங்குகின்றது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பணிக்கென அமெரிக்க ரகசிய பொலிசார் கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள், அரசியல் கட்சி தலைவர்களின் பாதுகாப்பையும் இவர்கள் தான் நிர்வகித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆறு கோடி ரூபாய் அளித்தால் மரண தண்டனை இரத்தாகும்

## சவுதி அரசின் நிபந்தனை

குற்றவாளி ஒருவரின் மரண தண்டனையை இரத்து செய்ய 6 கோடி ரூபாய் அளிக்கும் படி சவுதி அரசு நிபந்தனை விதித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் ஜோஸ்லிட்டோ சபன்டா. இவர் கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த தகராறின் போது, சூடான் நாட்டை சேர்ந்த நபரொருவரை கொன்று விட்டார்.

இதனையடுத்து தொடரப்பட்ட வழக்கில், சபன்டாவுக்கு தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அகினோவின் வேண்டுகோளின் படி, கடந்த நான்கு மாத காலமாக மரண தண்டனையை சவுதி அரசு நிறுத்தி வைத்துள்ளது.

மேலும் கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்துக்கு ஆறு கோடி ரூபாய் அளிக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

# சிரிய அரசுக்கு பின்னடைவு: விமான தளத்தை புரட்சி படை கைப்பற்றியது

சிரியாவில் கடந்த 22 மாதங்களாக நடந்து வரும் உள்நாட்டு போரில் ஏராளமான அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர்.

சிரியாவின் கிழக்கு பகுதியில் ஈராக் எல்லையோரம் அமைந்துள்ள அல்பு கமல் என்னும் இடத்தில் உள்ள ஹாம்தான் விமானதளத்தை புரட்சிப் படை கைப்பற்றி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஜனாதிபதி அசாத்தின் படையை விரட்டியடித்து அப்பகுதியில் பெரும்பான்மையான இடங்களை புரட்சி படையினர் கைப்பற்றி உள்ளனர்.


இந்நிலையில் சிரியாவின் எதிர் கட்சியான தேசிய கூட்டணியினரை தூதராக நியமிக்க பிரான்ஸ் ஒப்புக் கொண்டுள்ளது.



மேலும் சிரியாவில் நடைபெறும் உள்நாட்டு கலவரத்திற்கு இதுவரையிலும் 38,000 பேர் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

# பேருந்தின் மீது ரயில் மோதி கோர விபத்து

## 50 குழந்தைகள் சாவு



எகிப்தில் பள்ளி குழந்தைகள் சென்று கொண்டிருந்த பேருந்தின் மீது ரயில் மோதியதில், 50 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் இருந்து சுமார் 350 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அல்மந்தாரா கிராமம் அருகே லெவல் கிராசிங் உள் ளது.

நேற்றுக் காலை அந்த இடத்தை பள்ளி பேருந்து ஒன்று கடக்க முயன்ற போது, மின்னல் வேகத்தில் வந்த ரயில் திடீரென மோதியது.

இந்த கோர விபத்தில் 47 குழந்தைகள் பரிதாபமாக இறந்தனர். 13 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

விபத்து நடந்த சாலையில் துண்டு துண்டாக சிதைந்து கிடந்த குழந்தைகளின் உடல் பாகங்களை பார்த்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் கதறித் துடித்தனர்.

இந்த குழந்தைகள் அனைவரும் 4 வயது முதல் 6 வயது வரை உள்ளவர்கள் ஆவர். மதப் பள்ளியில் படித்து வரும் இவர்கள் அனைவரும் பள்ளிக்கு சென்ற போது விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இறந்த மற்றும் காயமடைந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை உடனடியாக செய்யும்படி ஜனாதிபதி முகமது முர்சி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையே விபத்திற்கு முழுப் பொறுப்பேற்றுள்ள அந்நாட்டின் போக்குவரத்து துறை அமைச்சர் ரஷாத் அல்-மெடினி தனது பதவியை இராஜினாமா செய்தார்.



சிங்கப்பூரில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளின் குடும்பத்தினரை சந்தித்து உரையாடிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன்.

# மிக மெல்லியதாக காகிதம் போன்ற புல்லட் ப்ரூப் கண்டுபிடிப்பு

காகிதம் போன்ற மெல்லிய அளவு கொண்ட குண்டு துளைக்காத பொருளை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். வி.வி.ஐ.பி.க்களின் வாகனங்கள், போர் தளவாடங்கள் போன்றவை குண்டு துளைக்காத வகையில் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு தடினமான உலோகங்கள் பயன்படுத்தப்படுவதால், குண்டு துளைக்காத உடை அணிவதற்கு சிரமமான அளவில் உள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் மாகாண பல்கலைக்கழக தொழில்நுட்ப பிரிவு வல்லுனர்கள், தற்போது "நானோ" தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, காகிதம் போன்ற மெல்லிய புல்லட் ப்ருப் பொருளை தயாரித்துள்ளனர். இது கண்ணாடி போன்று பளபளப்பாகவும், ரப்பரை போன்று வளையும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.



இந்த மெல்லிய தன்மை வாய்ந்த புல்லட் ப்ருப் பொருள், துப்பாக்கி குண்டுகளை துளைக்க விடாமல் தடுப்பதை வெற்றிகரமாகச் சோதித்துள்ளனர்.


# பால்தாக்கரே இறுதிசடங்கு: மும்பை முழுவதும் பதற்றம்

சிவசேனா கட்சியின் தலைவர் பால்தாக்கரே காலமானதையடுத்து மும்பை மாநகர் முழுவதும் பதற்றமான சூழ்நிலையில் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் தொண்டர்கள் அனைவரும் அமைதி காக்கும் படி சிவசேனா தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**இறுதிச்சடங்களில் இறுதி ஊர்வலம்**

தாக்கரேயின் இறுதிச் சடங்குகள், நேற்று மாலை 3:00 மணிக்கு நடைபெறுற்றது.



## எனது தந்தை மறைந்து விட்டார்: தாக்கரே மறைவு குறித்து ரஜினிகாந்த் இரங்கல்

சிவசேனா கட்சித் தலைவர் பால்தாக்கரே காலமானதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உட்பட பல தலைவர்கள் அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

**பிரதமர் மன்மோகன் சிங்**

மராட்டியத்தில் சிவசேனாவை வலுவான சக்தியாக உருவாக்கிய பால் தாக்கரேயின் மறைவு ஈடு செய்ய முடியாதது.

அவரது தொண்டர்கள் அமைதி காத்து, நிதானமாக இருக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

**அத்வானி**

தாக்கரேயின் மறைவால் அரசியலில் மிகப்பெரிய வெற்றிடம் ஏற்பட்டுவிட்டதாக பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

**இந்திய கம்யூனிஸ்ட்**

அரசியலில் தவிர்க்க முடியாத தலைவர் தாக்கரே என்று இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலாளர் டி.ராஜா கூறியுள்ளார்.

**சுஷ்மா சுவராஜ்**

தாக்கரேயின் மறைவு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியிருப்பதாக சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

**நரேந்திர மோடி**

படைவீரனைப் போல செயல்பட்ட பால் தாக்கேர மறைந்ததால், நாட்டுப்பற்று அடையாளத்தை நாடு இழந்துவிட்டது என்று குஜராத் முதல்வர் மோடி கூறியுள்ளார்.

**ரஜினிகாந்த்**

என் தந்தை போன்றவரும், தலைசிறந்த தலைவருமான தாக்கரே மறைந்துவிட்டார் என்று ரஜினிகாந்த் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேசிய விருது பெற்ற இயக்குனர் மதுர் பண்டார்க்கர், லதா மங்கேஷ்கர், நடிகை தியா மிஸ்ரா, குல் பனாக், சுகேல் சேத், சிரிஷ் குந்தர், நேகா துபியா, விவேக் ஓபராய், சித்தார்த், ராஜ் குந்த்ரா, ரித்தேஷ் தேஷமுக், ஹேமமாலினி, அஜய் தேவ்கான் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# சவீதா மரணத்தின் எதிரொலி: கருக்கலைப்பு சட்டம் குறித்து அயர்லாந்தில் ஆலோசனை

இந்திய பெண் சவீதா மரணமடைந்ததையடுத்து இது தொடர்பாக அயர்லாந்து நாடாளுமன்றத்தில் அவரச ஆலோசனை நடைபெற்றது.

இது குறித்து அந்நாட்டு பிரதமர் எண்ட கென்னி, ஐரீஸ் நாட்டு மக்களிடையே பன்னெடுங்காலமாக உள்ள நம்பிக்கையில் திடீர் முடிவுகள் எடுக்க முடியாது, கருக்கலைப்பு சட்டம் குறித்து உடனடியாக முடிவெடுக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

இதனிடையே கருக்கலைப்பு மறுப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கருக்கலைப்பு விதிகளை சற்று தளர்த்தக் கோரியும் 2 ஆயிரம் பேர் தலைநகர் டப்ளினில் நாடாளுமன்றத்திற்கு வெளியே பேரணி நடத்தினர்.

இதேபோல், சவிதாவின் மரணத்துக்கு கண்டனம் தெரிவித்து லண்டனில் அயர்லாந்து நாட்டுத் தூதரகம் எதிரே நேற்று மக்கள் போராட்டம் நடத்தினர்.



இந்நிலையில், சவிதாவின் மரணம் குறித்து விசாரணைக்கு அந்நாட்டு சுகாதாரத்துறை ஜேம்ஸ் ரெய்லி உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அயர்லாந்து பிரதமர் எண்ட கென்னி ரேடியோவில் பேசுகையில், கருக்கலைப்பு செய்ய முடியாமல் போனதால் ரத்தம் விஷமாக இந்தியப் பெண் மரணமடைந்துள்ளது துரதிஷ்டவசமானது.

மேலும் விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# பாகிஸ்தான் ரயில்வே துறையை இந்தியாவின் லாலுவிடம் ஒப்படைக்குமாறு பாக். கிண்டல்

பாகிஸ்தான் இரயில்வேத் துறையை லாலு பிரசாத்திடம் ஒப்படையுங்கள் என்று அந்நாட்டு அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் இரயில்வேயில் நிதிப் பற்றாக்குறை காரணமாக பல்வேறு பிரச்சினைகள் உள்ளது.



இந்நிலையில் இன்று பாகிஸதான் நாடாளுமன்றத்தில் அந்நாட்டு இரயில்வேத் துறை அமைச்சர், இரயில்வேயின் மோசமான நிலைமை குறித்து பேசினார்.

அப்போது எழுந்துப் பேசிய அமைச்சர் சஜித் அகமது, பாகிஸ்தான் அரசால் இரயில்வேயை சரியாக நடத்தமுடியவில்லை என்றால் இந்தியாவின் முன்னாள் இரயில்வே அமைச்சர் லாலு பிரசாத்திடம் ஒப்படையுங்கள் என்று கூறினார்.

இதனால் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# இந்திய செய்திகள்

## இந்தியா,பாகிஸ்தான் தங்களது பகையுணர்வைப் புதைக்கவும்

### முஷாரப் வேண்டுகோள்



புதுடெல்லியில் நடந்த மாநாட்டில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் அவர் நிருபர்களிடமும் பேசியபோது: இந்தியா- பாகிஸ்தான் தங்களுக்குள் இருக்கிற பிரச்சினைகளுக்கு தீர்வு காண முதலில் விருப்பம் கொள்ள வேண்டும்.

இரு நாடுகள் இடையேயான நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்தப் பிரச்சினைகள்தான் பகைமை உணர்வை, மோதல்களை, சண்டைகளை ஏற்படுத்தியுள்ளன.

நாம் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இதுதான் போரையும், மோதலையும் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பாகிஸ்தானில் முஜாகிதீன்களையும், மத தீவிரவாதத்தையும் ஏற்படுத்துகிறது.

ஐரோப்பிய நாடுகளை பார்த்து, இந்தியாவும், பாகிஸ்தானும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் நமது பகையுணர்வை புதைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இரு நாடுகள் இடையேயான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பாகிஸ்தான் இராணுவம் இப்போது சாதகமாக உள்ளது என முஷாரப் கூறினார்.



தமிழ் இலக்கியங்களில், பெண்களின் கரங்களோடு ஒப்பிடப்பட்ட செங்காந்தள் மலர், ஆர்.கே.பேட்டை அருகே காப்புக் காட்டில் பூத்துள்ளது.

## உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் இந்தியருக்கு ஐந்தாம் இடம்

உலகின் மிக வும் சக்திவாய்ந்த 50 பெண் தொழில் அதிபர்கள் பட்டியலில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியின் எம்.டியும். CEO (Chief executive officer) சந்தா கொச்சார் 5வது இடத் தைப் பிடித்துள்ளார்.

பார்ச்சூன் பத்திரிக்கை உலகின் மிகவும் சக்தி வாயந்த் 50 பெண் தொழில் அதிபர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியின் எம்.டியும்., CEOTkhd சந்தா கொச்சார் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.



பெட்ரோபிராஸ் என்னும் மிகப் பெரிய எண்ணெய் மற்றும் கேஸ் கம்பெனியின் தலைவராக உள்ள பிரேசிலைச் சேர்ந்த மரியா டாஸ் கிராஸஸ் ஃபாஸ்டர் உலகின் சக்திவாய்ந்த 50 பெண் தொழிலதிபர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் உள்ள பெரிய வங்கிகளில் ஒன்றான வெஸ்ட்பேக் தலைவர் கெய்ல் கெல்லி, பிரித்தானியாவில் உள்ள ஆங்கிலோ-அமெரிக்கன் பிஎல்சி சுரங்க நிறுவன தலைவர் சிந்தியா காரல், சீமன்ஸ் தலைவர் ஜேர்மனியைச் சேர்ந்த பார்பரா ஆகியோர் 2, 3 மற்றும் 4ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர்.

37வது இடத்தில் ஆக்சிஸ் வங்கியின் தலைவர் ஷிகா சர்மாவும், 40ஆவது இடத்தில் ஹெச்.எஸ்.பி.சி. வங்கியின் தலைவர் நைனா லால் கித்வாயும் உள்ளனர்.

# கால்பந்தாட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் சம்பியன்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 14 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வலிகாமம் வலயச் சம்பியனாகியது.

இக்கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்நெல் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலயத்தை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டு 3 : 0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் அணி மேலும் கோல்கள் போடும் வாய்ப்பை தடுத்தது. இருப்பினும் ஹென்றியரசர் கல்லூரி அணி மேலும் ஒரு கோலைப் போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஏழாலை ஸ்ரீமுருகன் கோல் எதனையும் போடவில்லை. இறுதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 4 : 0 என்ற கோல் கணக்கில் வலிகாமம் வலய சம்பியனாகியது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதியது. ஆட்டம் முடியும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. சமநிலை தவிர்ப்பு உதையில், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 3 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் ஏற்பாட்டில் யாழ் மாணவர்களுக்கு ரக்பி பயிற்சி



யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகமும் சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் அமைப்பும் இணைந்த ஏற்பாட்டில் ரக்பி பயிற்சி பட்டறை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

கல்வி சிறந்த கல்விமான்களை உருவாக்குவது போல் விளையாட்டு ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கும் என்ற சிந்தனையின் மூலமும் மாணவர்களிடையே சிறந்த திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன், யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவின் வேண்டு கோளுக்கிணங்க இப் பயிற்சிமுகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சப்பிரகமுவ ஸ்டேலியன்ஸ் நிறுவனப் பணிப்பாளர் வர்ண டி சில்வாவினால் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்து கல்லூரி, மாதகல் சென் ஜோசப், மானிப்பாய் இந்து கல்லூரி, ஊர்காவற்துறை சென். ஆன்றனிஸ் ஆகிய பாடசாலை மாணவர்கள் இப்பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு ரக்பி விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

# இலங்கை அணியில் முரளிதரன் இல்லாதது மகிழ்ச்சி: ராஸ் டெய்லர்

இலங்கை அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் மோதும்போது இலங்கை அணியில் முத்தையா முரளிதரன் இல்லாதது மகிழ்ச்சியளிப்பதாக நியூசிலாந்து அணியின் அணித் தலைவர் ராஸ் டெய்லர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபெறவுள்ளது. அதில் முதலாவது போட்டி நாளைய தினம் ஆரம்பிக்கவுள்ளது. இது குறித்து நியூசிலாந்து அணியின் அணித்தலைவர் ராஸ் டெய்லர் கூறுகையில், முத்தையா முரளிதரன் இலங்கை அணியில் இல்லாதது குறித்து மகிழ்ச்சியளிக்கிறது.

ஆனாலும் எங்களின் சிறப்பான திறமை வெளிப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை அணியின் பந்துவீச்சை அடித்தாட முயற்சிப்போம்.

டெஸ்ட் போட்டியின் ஆரம்ப ஓவர்கள் முக்கியமானவை. புதிய பந்துடன் வீசும் போது சரியான இடங்களில் பந்துகளை வீசி விக்கெட்டுக்களைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டும்.

குறிப்பாக இங்கிலாந்து அணி சமீபத்தில் இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசி அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்கள் என்று தெரிவித்தார்.

இலங்கை ஆடுகளங்களில் சுழற்பந்து வீச்சுக்கு மட்டும் அதிக உதவிகள் கிடைக்காது என்றும் மழை வானிலை காரணமாக வேகப்பந்து வீச்சாளர்களும் சிறப்பாகப் பந்துவீசக் கூடியவாறு வாய்ப்பு காணப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டிகளின் முடிவுகள்

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டிகளின் கடந்த போட்டியில் ஆர்சனல், லிவர்பூல், மன்செஸ்டர் சிட்டி, ஸ்வன்சி, கௌதம்டன், றெடிங், வெஸ்ட் ப்ரோம்விச், நோர்விச் கழகங்கள் வெற்றிபெற்றுள்ளன.

ஆர்சனல் கழகத்திற்கும், ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் கழகத்திற்குமிடையிலான போட்டியில் ஆர்சனல் கழகம் 5 - 2 என்ற கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றது. ரொட்டென்ஹம் கழகம் சார்பாக 10ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்ட போதிலும், அந்த கோலைப்பெற்ற அடேபயோர் 18ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து ஆர்சனல் கழகம் 24ஆவது, 42ஆவது, 45ஆவது, 60ஆவது, 90ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றது. ரொட்டென்ஹம் கழகம் 71ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்றது.

லிவர்பூல் கழகத்திற்கும், விகான் அத்லெட்டிக் கழகத்திற்குமிடையிலான போட்டியில் லிவர்பூல் கழகம் 3 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. லிவர்பூல் கழகம் சார்பாக 48ஆவது, 58ஆவது, 66 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

மன்செஸ்டர் சிட்டி கழகத்திற்கும், அஸ்டன் வில்லா கழகத்திற்குமிடையிலான போட்டியில் மன்செஸ்டர் சிட்டி கழகம் 5 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அக் கழகம் சார்பாக 43ஆவது, 54 ஆவது, 65ஆவது, 67ஆவது, 7[illegible] ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

# பங்களாதேஷை தோற்கடித்தது மேற்கிந்தியத் தீவுகள்



பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

6 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இன்றைய நாள் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 273 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்படி பங்களாதேஷ் அணிக்கு 245 ஓட்டங்கள் என்ற இலக்கு வழங்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரன் பவல் 110 ஓட்டங்களையும், டெரன் பிராவோ 76 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சொஹாக் கஷி 6 விக்கெட்டுக்களையும், ரூபெல் ஹொசைன், ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 245 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்து 77 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஒரு கட்டத்தில் 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்து பலமான நிலையில் காணப்பட்ட அவ்வணி, அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மகமுதுல்லா 29 ஓட்டங்களையும், நயீம் இஸ்லாம் 26 ஓட்டங்களையும், ஷகாரியார் நபீஸ் 23 ஓட்டங்களையும், நசீர் ஹொசைன் 21 ஓட்டங்களையும், ஜுனைட் சித்திக்கி 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரீனோ பெஸ்ட் 5 விக்கெட்டுக்களையும், வீரசம்மி பேர்மாள் 3 விக்கெட்டுக்களையும், ரவி ராம்போல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மிர்பூரில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 527 ஓட்டங்களையும், பதிலளித்தாடிய பங்களாதேஷ் அணி 556 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக இரண்டு இனிங்ஸ்களிலும் சதமடித்த கெரன் பவல் தெரிவானார்.

# நிதிப் பற்றாக்குறை - டெஸ்ட் போட்டிகள் பிற்போடப்படுகின்றன

இலங்கை அணி பங்குபற்றும் டெஸ்ற் போட்டிகளை இலங்கை கிரிக்கெட் சபை பிற்போடுவதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை அண்மைக்காலத்தில் டெஸ்ற் போட்டிகளைப் பிற்போட்டு கொண்டதோடு அவற்றிற்கு பதிலாக ஒருநாள் சர்வதேச போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது. குறிப்பாக மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான டெஸ்ற் தொடர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இந்திய, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் பங்குபெறும் முக்கோண ஒருநாள் சர்வதேசப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

மறுபுறத்தில் அடுத்தாண்டு இடம்பெறவிருந்த தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ற் தொடர் 2015 ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளது. இலங்கையின் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடருக்காகவே இது பிற்போடப்பட்டிருந்தது.

இந் நிலையில் கருத்து தெரிவித்த மஹேல ஜெயவர்தன, இலங்கை கிரிக்கெட் சபையின் நிதி நிலை முக்கியமானது என தெரிவித்தார்.

வீரர்களாக தாங்கள் அடுத்த 12 மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்படாது காணப்படப் போகின்றோமா, இலங்கையின் உள்ளூர் வீரர்களுக்கு உதியம் வழங்கப்படாது போகப் போகிறதா, இலங்கையின் உள்ளூர்ப் போட்டிகள் நிதி நெருக்கடி காரணமாக நடைபெறாது போகப் போகிறதா இல்லை டெஸ்ற் போட்டிகளை பிற்போட்டு போட்டி அட்டவணையை மாற்றுவதா என்பதை அறிய வேண்டும் என தெரிவித்தார்.

இந்த முடிவுகள் கடினமான முடிவுகள் என தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்த முடிவுகள் குறித்து இரண்டு வகையான கருத்துக்கள் காணப்படும் என வும் தெரிவித்தார்.

சிலர் அந்த முடிவுகளை விரும்ப மாட்டார்கள் எனவும் சிலர் அந்த முடிவுகளுக்கான காரணங்களை புரிந்து கொள்வார்கள் எனவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 19.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது